நங்கையர் மனதைக் கொள்ளை கொள்ளும்
தங்க, வைர நகைகளுக்கு



அம்பிகா ஜுவலர்ஸ்
77, செட்டியார் தெரு, கொழும்பு-11.
தொலைபேசி 422839, 434238



செய்தி இதழாக பதிவு பெற்றது

# தினபதி

ரூ 3/50

THE MOST INFLUENTIAL TAMIL DAILY IN SRI LANKA

DINAPATHI இல் 6568 1990 ஏப்ரல் 20 வெள்ளிக்கிழமை ★ ★ ★ தினபதி



தரமான 22 கரட்
தங்க வைர நகைகளுக்கு
நம்பிக்கையான
ஸ்தாபனம்

Ambiga
JEWELLERS (PTE) LIMITED
SEA STREET, COLOMBO. 11.
Phone: 422839 434238


பொலீஸார் வழமையான கடமைகளில்

# பாதுகாப்பு படைகளின் செயற்பாடுகள் நிறுத்தம்

## 10 கட்சிகளின் பிரதிநிதிகள் கொண்ட சரணடைவு குழு

### இயங்குவதற்கே இந்த ஏற்பாடு

— க குணராஜா —

கொழும்பு, ஏப்ரல் 19

**பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகள் யாவும் இன்றுடன் நிறுத்தப்பட்டுள்ளன. எனினும் பொலீஸார் தமது வழமையான கடமைகளில் ஈடுபடுவர். இப்படி பெருந்தோட்டத்துறை அமைச்சரும் பாதுகாப்பு ராஜாங்க அமைச்சருமான திரு. ரஞ்சன் விஜேரத்ன தெரிவித்தார்.**

அமைச்சரவை முடிவுகளை அறிவிப்பதற்காக, பாதுகாப்பு அமைச்சில் நேற்று பத்திரிகையாளர் மாநாடு நடைபெற்றது.

பத்திரிகையாளர் மாநாட்டில் திரு ரஞ்சன் விஜேரத்ன மேலும் கூறியதாவது:-

பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன. இன்றிலிருந்து சுதந்திர சரணடைவு குழு இயங்குகிறது.

இதற்கு வழிவிடுவதற்காகவும் செவ்வனே சரணடைவு குழு இயங்குவதற்காகவுமே பாதுகாப்புப் படைகளின் செயற்பாடுகள் நிறுத்தப்பட்டிருக்கின்றன.

சரணடைபவர்களுக்கு இப்படி ஒரு நல்ல வாய்ப்பு அளிக்கப்பட்டிருக்கிறது.

சுதந்திர சரணடைவு குழுவில் 10 கட்சிகளின் பிரதிநிதிகள் அங்கம் வகிக்கின்றனர்.

சுதந்திர சரணடைவு குழுவின் அங்கத்தவர்கள் இன்று மாலை ஜனாதிபதியை அவரது அலுவலகத்தில் சந்திப்பர்.

இவ்வார இறுதியில் சரணடைவோர் தொடர்பான முழுமையான அறிக்கை ஒன்றை இந்த குழுவினர் ஜனாதிபதிக்கு சமர்ப்பிப்பர்.

சரணடைவு குழுவிலுள்ள 10

வடக்கு கிழக்கிற்கு

## பொலீஸார்

இன விகிதாசாரப்படி

## திறந்தவெளி பல்கலை

### மாணவர் நலனுக்கு நிதியம்

கொழும்பு ஏப் 19

பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட திறந்தவெளி பல்கலைக்கழக மாணவர்களுக்கென விசேஷ நிதியம் ஒன்று ஆரம்பிக்கப்படும்-

இது குறித்து மேற்படி பல்கலைக்கழக நிர்வாகிகள் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றனர்-

திறந்த வெளி பல்கலைக்கழக மாணவர்களிடம் இருந்து ஒரு சிறு தொகை கட்டணமே அறவிடப்பட்டு வருகிறது-

எனினும் இந்த சிறு தொகையைக் கூட ஒரு சில மாணவர்களால் செலுத்த முடியாத நிலை இருந்து வருவதாக பல்கலைக்கழக அதிகாரி ஒருவர் சொன்னார்-

இவ்வாறு பொருளாதார ரீதியில் பாதிக்கப்பட்ட திறமையுள்ள மாணவர்களின் நன்மை கருதியே இந்த நிதியம் ஆரம்பிக்கப்படவுள்ளது-

இந்த நிதியம் முதல் முதலாக கொடைவள்ளல்களின் அன்பளிப்

[2ஆம் பக்கம் பார்க்க]

சோமண்ணை



பல்கலை விஷயத்திலை சுமமா கிடக்கிற சஙகை ஊதிக் கெடுத்துப் போடுவினமோ?

## மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால்

### எந்த சவாலையும் சந்திக்க தயார் என்கிறார் பிரபா

கொழும்பு ஏப் 19

மலைபோல் மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கிறது-எந்தப் புதிய சவாலையும் சந்திக்க நாம தயார் இப்படி தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத் தலைவர் திரு வே பிரபாகரன் தெரிவித்திருக்கிறார்-

வடக்கு கிழக்கு முழுவதிலும் நேற்று பல்வேறு நிகழ்ச்சிகளுடன் எழுச்சி தினம அனுஷ்டிக்கப்பட்டது- அன்னை பூபதியின் தியாகமும் நினைவு கூரப்பட்டது-

இதனையொட்டி நேற்று முன் தினம யாழ் தலைமையகத்திலிருந்து விடுத்த அறிக்கையிலேயே திரு பிரபாகரன் மேற்கண்டவாறு குறிப்பிட்டிருக்கிறார்-

அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டிருப்பதாவது-

எமது அன்பிற்கும மதிப்பிற்கும் உரிய தமிழீழ மக்களே! இன்று (19 ஆம திகதி) நாம ஒரு மகத்தான தியாகியை, அந்த தியாகியின் அற்புதமான அர்ப்பணி

[2ஆம் பக்கம் பார்க்க]

## புத்தளத்தில் இன்று ஊர்வலம்.

புனித பைத்துல் முகத்தஸ் மீட்பு தினத்தை முன்னிட்டு இன்று (வெள்ளிக்கிழமை) புத்தளம நகரில் மாபெரும ஊர்வலம ஒன்று நடத்தப்படும.

ஜும்மா தொழுகையின் பின்னர் நகரிலுள்ள இதருல் பள்ளிவாசலில் இருந்து இந்த ஊர்வலம ஆரமபமாகும.

ஊர்வலம நகரினூடாக ஜும்மா பள்ளி வாசலை சென்று பின்னர் மொஹிதீன் நடையும.

## சர்வதேச "குத்ஸ்" தினம் இன்று

கொழும்பு, ஏப். 19

ரமழானின் இறுதி வெள்ளிக்கிழமையான இன்று 20 ஆம திகதி சர்வதேச "குத்ஸ்" தினம அனுஷ்டிக்கப்படுகிறது.

இன்றைய தினம புனித பைத்துல் முகத்தஸ் அல் அக்ஸா மீட்புக்காக முஸ்லிமகள் பிரார்த்தனை புரிய வேண்டுமென்றும வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

## அன்னை பூபதி நினைவாக பேரணிகளும், கூட்டங்களும்

கொழுமபு, ஏப். 19

அன்னை பூபதியின் நினைவு தினத்தை முன்னிட்டு நேற்று வடக்கு கிழக்கில் பல எழுச்சிப் பேரணிகளும, பொதுக் கூட்டங்களும கலை நிகழ்ச்சிகளும இடமபெற்றன.

ஆங்காங்கே இடமபெற்ற எழுச்சிப் பேரணிகளில் ஆண்களும பெண்களும அணிதிரண்டிருந்தனர்.

திருகோணமலையில் நடைபெற்ற எழுச்சிப் பேரணியில் இந்தியப் படையினரின் வெளி

[2ஆம் பக்கம் பார்க்க]

பஸ் தீப்பற்றியதால்

## மாணவர்கள், ஆசிரியர்கள் கருகி மாண்டனர்

## இனி விகிதாசாரப்படி

கொழும்பு, ஏப். 19

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் பொலீஸ் நிலையங்களைத் திறப்பதற்கு விடுதலைப் புலிகள் ஆட்சேபனை தெரிவிக்கவில்லை. இந்தப் பகுதிகளில் இனி இன விகிதாசார அடிப்படையில் பொலீஸார் நியமிக்கப்படுவார்கள்.

இத்தகவலை பெருந்தோட்டத்துறை அமைச்சரும், பாதுகாப்பு ராஜாங்க அமைச்சரும், அமைச்சரவைப் பேச்சாளருமான திரு ரஞ்சன் விஜேரட்ன நேற்று நடத்திய பத்திரிகையாளர் மாநாட்டில் தெரிவித்தார்.

அவர் மேலும் கூறியதாவது:

வடக்கு கிழக்கில் இப்போது அமைதி நிலவுகிறது. மக்கள் சுதந்திரமாக பொருள்களை பொலீஸ் நிலையங்கள் இயங்குகின்றன.

இவ்வாறு அமைச்சர் கூறினார்.

(உ-கு)

---

சரணடைவு குழுவிலுள்ள 10 கட்சிகளின் பிரதிநிதிகள் விவரம வருமாறு:-

1. அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் — திரு சி சூரியகுமார்
2. ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி — திரு ஜயபத்திரன,

[2ஆ பக்கம பார்க்க]

---

...

வடமேல் மாகாண சபையின் புத்தளம மாவட்ட உறுப்பினருமைபத்துல் முகத்தஸ் மீட்புக்குழுவின் புத்தளம கிளைத் தலைவருமான டாக்டர் ஐ எம இல்யாஸ் கூட்டத்திற்கு தலைமை தாஙகுவார்.

(ல-ர-241)

---

ஸ்ரீ லங்கா இஸ்லாமிய மாண

[2ஆ பக்கம பார்க்க]

---

பேருட் ஏப் 19

கிறிஸ்தவர்களின் ஆதிக்கத்தில் உள்ள கிழக்கு பேருட்டில் கடந்த புதன் அன்று பாடசாலை பஸ் ஒன்று தீப்பற்றியதால் அதில் பிரயாணம செய்த 11 மாணவரும, 4 ஆசிரியர்களும கருகி மாண்டனர்-

கிறிஸ்தவர், முஸ்லிம படைகளிடையே ஏற்பட்ட மோதலில் பஸ் அகப்பட்டதாலேயே இக் கோர விபத்து நடந்தது-

[2ஆ பக்கம பார்க்க]

---

## ஈ. பி. ஆர். எல். எப் — ஹமீது சந்திப்பு விரைவில் நடக்கும்

கொழும்பு ஏப் 19

ஈ பி ஆர் எல் எப் உடன் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு முயற்சிகள் எடுக்கப்படுகின்றன என்று அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன சொன்னார்-

அவர் மேலும் கூறியதாவது—

ஈ பி ஆர் எல் எப் புல கோரிக்கைகளை விடுத்திருக்கின்றது- நீதி அமைச்சரும வடக்கு கிழக்கு மாகாண சமாதான குழுவின் தலைவருமான ஜனாப் ஏ சி எஸ் ஹமீது ஈ பி ஆர் எல் எப் உடன் பேசுவதற்கான முயற்சிகளை மேள்கொள்வார்-

மிகு விரைவில் சந்திப்பு ஏற்படும- ஆனால் எந்த அச்சுறுத்தலையும ஏற்கு மாட்டோம-

இவ்வாறு அமைச்சர் கூறினார்-

19 நிபநதனைகளை ஈ பி ஆர் எல் எப் கைவிட்டால் பேசத் தயார் என அமைச்சர் ரஞ்சன் கடந்த வாரம குறிப்பிட்டிருந்தது தெரிந்ததே-

(உ—கு)

---

## தேர்தலில் இளைஞர்கள் ஆசக் கூடுதல் வயதெல்லை 35

கொழும்பு ஏப் 19

உள்ளூராட்சி மன்றத் தேர்தல்களில் 40 சதவீதமான இளைஞர்களை போட்டியிட வைப்பதற்கு அரசாஙகம தீர்மானித்துள்ளது- இதற்கு ஏற்ப திருத்தச் சட்டம ஒன்று விரைவில் கொண்டு வரப்படும-

இளைஞர்களுக்கான புதிய வயதெல்லை 30 இல் இருந்து 35 ஆக அதிகரிக்கப்பட்டுள்ளது என்றார் அமைச்சர் ரஞ்சன் விஜேரத்ன-

உள்ளூராட்சி சபைகளுக்கான தேர்தல்களை நடத்துவதற்கு முன்னதாக தற்போது இயஙகி வரும- உள்ளூராட்சி சபைகளும கலைக்கப்பட்டு ஒரே நாளில் தேர்தல்கள் நடத்தப்படும-

மாநகர சபை, நகரசபை, பிரதேச சபை ஆகியவற்றிற்கான

[2ஆ பக்கம பார்க்க]

---

## ரயில் சேவை

கொழும்பு ஏப் 19

மலையகத்திற்கான ரயில் சேவை நேற்று (19ஆம திகதி) முதல் மீண்டும வழமைக்கு திருமபியது-

கடந்த 17 ஆம திகதி பதுளையில் இருந்து கொழும்பு நோக்கி வந்த பொடி மெனிக்கே ரயில் பிளிமத்தலாவையில் வைத்து தடம புரண்டது-

இதையடுத்து கொழுமபுக்கும பதுளைக்கும இடையிலான ரயில் சேவை கடந்த இரு தினஙகளாக நடைபெறவில்லை-

சேதமடைந்திருந்த ரயில் தண்டவாளஙகள் திருத்தப்பட்டதைத் தொடர்ந்த நேற்று ரயில் சேவை வழமைக்குத் திரும்பியது-

(ல—ர)

---

## யாழ்ப்பாணத்துக்கு அமைச்சர் அதிகாரி பயணம்

கொழும்பு ஏப் 19

மறுவாழ்வு மறுசிரமைப்பு சமூக நலத்துறை அமைச்சர் ஏ எம எஸ் அதிகாரி விரைவில் யாழ் குடாநாட்டுக்கு விஜயம செய்யவிருக்கிறார்- அஙகு சேதஙகளையும இழப்புகளையும நேரிடையாக அவர் பார்வையிடுவார்-

ஜனாதிபதியின் பணிப்புரையைத் தொடர்ந்தே அமைச்சர் அதிகாரி தமது யாழ் விஜயத்தை மேற்கொள்கிறார்-

அமைச்சருடன் அமைச்சு அதிகாரிகளும யாழ்ப்பாணம செல்வர்- அஙகு மறுவாழ்வு மற்றும் மறுசிரமைப்புப் பணிகள் தொடர்பாக அதிகாரியும அமைச்சரும கூடி ஆராய்வர்-

அமைச்சர் தமது விஜயத்தின் போது திட்டஙகள் செயல்படுத்தப்பட்டு வரும பகுதிகளுக்கு நேரில் செல்வார்- மக்களைச் சந்தித்து உரையாடுவார்- அரசாஙக அதிகாரிகளையும விடுதலைப் புலிகளையும சந்தித்து மறுவாழ்வு திட்டத்தின் செயற்பாடு குறித்து அவர்களுடன் பேச்சுவார்த்தை நடத்துவார்-

அமைச்சர் ஏ எம எஸ் அதிகாரி ஏற்கனவே தமது விஜயம குறித்து வடக்கு கிழக்கு மாகாண ஆளுநர் நளின் செனவிரத்னவிடம பேச்சுவார்த்தை நடத்தியுள்ளார்- இப்போது யாழ் குடாநாடு சென்றுள்ள ஆளுநர் அமைச்சரின் விஜயத்துக்

[2ஆ பக்கம பார்க்க]

---

## நோன்பு தொழுகை நேரங்கள்

| | |
|---|---|
| ஸஹ்ர் முடிவு | 4-26 |
| சுபஹ் | 4-41 |
| சூரிய உதயம | 6-31 |
| ளுஹ்ர் | 12-20 |
| அஸர் | 3-20 |
| மஃரிபு | 6-18 |
| இஷா | 7-38 |

---

## ராகிங்: பொலீஸார் தடுப்பர்

கொழும்பு ஏப் 19

பல்கலைக்கழகங்களிலும அவற்றுக்கு வெளியிலும ராகிங சேஷ்டைகள் தடை செய்யப்பட்டுள்ளன- மாணவர்கள் ராகிங சேஷ்டைகளுக்கு உட்படுத்தப்படுவதை உபவேந்தர்களால் கட்டுப்படுத்த முடியாது போகும பட்சத்தில் பொலீஸார் குறுக்கிட்டு நடவடிக்கை எடுப்பர்-

ஆகவே மாணவர்கள் ராகிங சேஷ்டைகளில் ஈடுபடாதிருக்குமபடி கேட்கப்பட்டுள்ளனர்-

அமைச்சரவை முடிவுக்கு அமைய இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது-

(உ—கு—032)

---

## எது காரணம் பற்றியும் திருமலையை இழக்க முடியாது

### பொதுக்கூட்டத்தில் மாத்தயா

திருகோணமலை ஏப் 19

திருகோணமலையை எது காரணம பற்றியும நாம இழக்க முடியாது- அதை எவரும பறித்தெடுக்க விட மாட்டோம என்றார் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணித் தலைவர் திரு மகேந்திர ராஜா (மாத்தயா)-

விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் கூட்டம ஒன்று நேற்று முன்தினம மாலை திருகோணமலை முற்றவெளியில் நடைபெற்றது-

மூதூர் அரசியல் பொறுப்பாளர் திரு அரசன் இக்கூட்டத்திற்கு தலைமை வகித்தார்-

பத்தாயிரத்துக்கும மேற்பட்டோர் இக்கூட்டத்தில் கலந்து கொண்டனர்-

இக்கூட்டத்தக்கு வந்த திரு மாத்தயா, திரு காசி ஆனந்தன், திரு ரூபன் - திரு பதுமன், திரு ரவி - செல்வி சுந்தரி, கீதா ஜெயா ஆகியோர் மலர் மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்- அத்துடன் மேளதாளத்துடன் ஊர்வலமாக அழைத்து வரப்பட்டனர்-

இக்கூட்டத்தில் திரு மாத்தயா மேலும பேசுகையில் கூறியதாவது—

(4 ஆம பக்கம பார்க்க)

---

ஆணித்தரமான அரசியல் செய்திகளையும் துணிச்சலான கருத்துரைகளையும் தருவது தினபதி

# இலங்கை ஆழ்கடலில் அதிகளவு மீன் வளம்

## ஆய்வு மூலம் தகவல்

கொழும்பு, ஏப். 19

இலங்கையின் ஆழ்கடல் பகுதியில் 70 ஆயிரம் முதல் 90 ஆயிரம் தொன் வரையிலான மீன் வளம் இருப்பதாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளது.

அண்மையில் ஆழ்கடலில் நடத்தப்பட்ட ஆய்வுகளிலிருந்து இத்தகவல் தெரிய வந்துள்ளது.

ஆயினும் இங்குள்ள மீனவர்களினாலும் மீன்பிடி வள்ளங்களினாலும் எட்டாயிரம் தொன் மீன் மட்டுமே பிடிக்க முடியும்.

சுமார் 60 ஆயிரம் தொன் முதல் 80 ஆயிரம் தொன் வரையிலான மீன் வளம் இலங்கைக்கு கிடைப்பதில்லை. இதுவும் ஆய்வுகளின் மூலம் தெரிய வந்துள்ளது.

இந்நிலையை மாற்றி இலங்கையில் மீன்பிடித் துறையை அபிவிருத்தி செய்வதற்கும் இலங்கையின் மீன் வளத்தினால் உரிய பலனைப் பெறவும் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

இதனை கடற்றொழில் அமைச்சின் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

நடுக்கடலில் சென்று மீனவர்கள் மீன் பிடிப்பதற்கு வசதியாக வெளிநாட்டு உதவியுடன் அதி நவீன மீன்பிடி வள்ளங்களும் வழங்கப்படும் என்றும் அந்த அதிகாரி மேலும் கூறினார்.

## யாழ்ப்பாணத்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கான ஏற்பாடுகளை மேற்கொண்டு வருகிறார்.

வடக்கு கிழக்கு மாகாணங்களின் மறுவாழ்வு மற்றும் மறுசீரமைப்புப் பணிகளுக்கு ஏற்கனவே அரசாங்கம் பணம் வழங்கியுள்ளது. ஆனால் இந்தியப் படைகளின் பிரசன்னம் அமைதியற்ற நிலைமை காரணமாக அமைச்சின் பணிகள் எவ்வாறு நடைபெற்று வருகின்றன என்பதைக் கண்காணிக்க முடியாதிருந்தது என்றும் அமைச்சர் கூறினார்.

யாழ் குடா நாட்டில் நிலைமைகள் மேலும் முன்னேற்றம் கண்டதும் அங்கு ஜனாதிபதி நேரிலேயே விஜயம் செய்வார் என்றும் அவர் தெரிவித்தார்.

இதே சமயம் மறுவாழ்வு மறுசீரமைப்பு அமைச்சரின் யாழ் விஜயத்தைத் தொடர்ந்து மேற்படி பணிகளுடன் தொடர்பு கொண்ட பெருந்தெருக்கள் வீடமைப்பு, தொலைத் தொடர்பு, மின்சக்தி எரிசக்தி போன்ற அமைச்சுகளுக்கு பொறுப்பான அமைச்சர்களும் யாழ்ப்பாணத்துக்கு நேரிடையான விஜயம் செய்வர் என எதிர்பார்க்கப்படுகிறது.

(ல—032)

## மலை போல்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

ப்பை நினைவு கூர்ந்து எமது இதய அஞ்சலியை செலுத்துகிறோம்.

எமது புனித விடுதலைப் போராட்டத்தில் வரலாறாக் காவியமாகி விட்ட எமது தியாகிகளில் அன்னை பூபதி ஓர் உன்னத இடத்தைப் பெறுகிறார்.

ஒரு பெண்ணாக, ஒரு தாயாக, ஒரு குடும்பத்தின் தலைவியாக வாழ்ந்து வந்த சாதாரண வாழ்க்கையை துறந்து, சாதாரண பற்று உறவுகளை துறந்து தனது சமூகத்தின் சுபீட்சத்திற்காக தனது இனத்தின் விடுதலைக்காக அவர் தனது உயிரை அர்ப்பணித்தார்.

### தாய்க்குலத்தின் எழுச்சி வடிவம்

அவரது தியாகம் ஒப்பற்றது. உலக வரலாற்றில் புதுமையானது. இந்திய இராணுவ அடக்கு முறைக்கெதிராக அவர் தொடுத்த அறப்போர் சாந்திய தேசத்தை தலை குனிய வைத்தது.

தனி பந்தப் பிறவியாக அவர் சாகவில்லை. தமிழீழ தாய்க்குலத்தின் எழுச்சி வடிவமாக அவரது தியாகம் உன்னதமடைந்தது.

அதனால்தான் இன்றைய தினத்தை அன்னை பூபதியின் இரண்டாம் ஆண்டு நினைவு தினத்தை தேசிய எழுச்சி நாளாக, இந்திய ஆக்கிரமிப்பு இராணுவம் எமது மண்ணில் இருந்து விரட்டப்பட்ட வெற்றி நாளாக கொண்டாடுகிறோம்.

### மிகப் பெரிய சவால்

எமது தேசிய விடுதலைப் போராட்டம் எத்தனையோ சோதனைகளை சந்தித்த ...எத்தனையோ நெருக்கடிகளை எதிர்கொண்டு திருப்பு முனைகளுக்கு முகம் கொடுத்து வெற்றிகரமாக முன்னேற்றம் கண்டுவருகிறது.

வரலாற்று ரீதியாக பார்க்கும் போது நாம் சந்தித்த நெருக்கடிகளில் மிகவும் பாரதூரமானதென்றால், மிகவும் ஆபத்தான தென்றால் அது இந்திய இராணுவத்தின் ஆக்கிரமிப்பு என்றுதான் சொல்ல வேண்டும்.

### தனித்து நின்று எதிர்த்தோம்

இந்திய தலையீடானது எமது சுதந்திர போராட்டத்திற்கெதிராக எழுந்த மிகப்பெரிய சவாலாக அமைந்தது.

முதன் முதலாக எமது போராட்ட வரலாற்றில் ஒரு வல்லரசின் நேரடி இராணுவ தலையீட்டைச் சந்தித்தோம்.

ஒரு அன்னிய தேசத்து ஆக்கிரமிப்புப் படையை சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்ட

தில் நின்று கொண்டிருக்கிறது.

### எந்தச் சவாலையும் சந்திக்கத் தயார்

மலை போல மக்கள் சக்தி எமக்குப் பின்னால் இருக்கும் வரை எந்தப் புதிய சவாலையும் நாம் சந்திக்கத் தயார்.

இலட்சியத்தால் ஒன்றுபட்டு எழுச்சி கொண்ட மக்களை எந்த ஒரு சக்தியாலும் ஒடுக்கி விட முடியாது.

இன்றைய எழுச்சி தினத்தில் இந்திய இராணுவ அரக்கனை எதிர்த்துப் போராடி உயிர் நீத்த எமது தியாகிகளையும், மக்களையும் நினைவில் நிறுத்தி அவர்களுக்கு எமது வீர அஞ்சலியை செலுத்துவோமாக.

இவ்வாறு திரு பிரபாகரன் தமது தகவல் அறிக்கையில் தெரிவித்திருக்கிறார்.

(உ—ழ)

## வடக்கு கிழக்கு ரிசேர்வ் பொலீஸ் நேர்முக பரீட்சை

கொழும்பு, ஏப். 19

வடக்கு கிழக்கில் ரிசேர்வ் பொலீஸ் படைக்கு ஆட்களை சேர்த்துக் கொள்வதற்கான நேர்முகப் பரீட்சை இன்றும் நடைபெறும்.

ஏற்கனவே இந்தப் பதவிகளுக்கு விண்ணப்பிக்காதவர்களும் நேர்முகப் பரீட்சைக்குச் சான்றிதழ்களுடன் தோற்றலாம்.

நேர்முகப் பரீட்சைக்குத் தோற்றுபவர்கள் 8ஆம் வகுப்பு சித்தியடைந்திருப்பதுடன் 5 அடி 4 அங்குலம் உயரமாகவும் இருக்க வேண்டும். ஆண் பெண் இரு பாலாரும் விண்ணப்பிக்கலாம்.

நேர்முகப் பரீட்சைக்குப் பின்னர் வைத்திய பரீட்சை நடத்தப்படும்.

மட்டக்களப்பின் சிரேஷ்ட பொலீஸ் அதிபர் ஏ யோசேப் தலைமையில் ஒரு குழுவும் பொலீஸ் அதிபர் ஜோர்ஜ் நிக்கலஸ் தலைமையில் இன்னொரு குழுவும் நேர்முகப் பரீட்சையை நடத்தும்.

கிழக்கு மாகாணத்தில் இருந்தே கூடுதலான விண்ணப்பங்கள் கிடைத்துள்ளதாக வடக்கு கிழக்கு பிராந்திய பிரதி பொலீஸ் மா அதிபர் திரு

## சர்வதேச...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

வர் இயக்கமும் மக்கொன இந்திரிலிகொட அல்மத்ரசத்துல் மஹ்றூமிய்யா மாணவ கலா மன்றமும் ஒன்றிணைந்து பிரார்த்தனை நடத்தும்.

கலாமன்ற மண்டபத்தில் அதிபர் மௌலவி எம் ஏ எம் பஸீல் (மக்கீ) தலைமையில் "இப்தார்" நிகழ்ச்சியும் ஏற்பாடாகி உள்ளது.

(ல—007)

## குத்ஸ் தின வைபவம்

கொழும்பு, ஏப். 19

புனித குத்ஸ் தினத்தை முன்னிட்டு இன்று 20 ஆம் திகதி அக்குறணை நகரில் இலங்கை இஸ்லாமிய கவுன்சில் பல்வேறு நிகழ்ச்சிகளை நடத்தவுள்ளது.

## பாதுகாப்பு...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

3. ஐ தே கட்சி — திரு எஸ் டி சில்வா,
4. அகில இலங்கை முஸ்லிம் லீக் — ஜனாப் ஏ எல் எம் ஹாசிம்,
5. இலங்கை முற்போக்கு முன்னணி — திரு சிறிசேன ராஜபக்ஸ,
6. ஐக்கிய இலங்கை மக்கள் கட்சி — திரு ரஞ்சித் புஸ்ஸல்ல.
7. ஈழவர் ஜனநாயக விடுதலை முன்னணி — திரு எம் இராமலிங்கம்,
8. ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் — அல்ஹாஜ் எஸ் எம் சஹாப்தீன்.
9. ஸ்ரீ லங்கா மக்கள் கட்சி — செல்வி ரூபா குமாரணதுங்க,
10. லிபரல் கட்சி — திரு அசித்தா பெரேரா.

(உ—கு)

## அன்னை பூபதி...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

யேற்றம்; அவர்கள் செய்த அட்டூழியங்கள் என்பனவற்றை நினைவு கூரும் வகையில் அலங்கார ஊர்திகளின் பவனியும் இடம்பெற்றது.

இந்த எழுச்சிப் பேரணியும் ஊர்தியும் திருகோணமலை — உப்புவெளி 3 ஆம் கட்டையில் ஆரம்பமாகி எம் சி வீதி, மத்திய வீதி, டொக்யார்ட் வீதி, திரு ஞானசம்பந்தர் வீதி வழியாக சிவன் கோவிலை வந்தடைந்தன.

சுமார் ஐயாயிரத்தும் மேற்பட்ட மக்கள் இதில் கலந்து கொண்டனர்.

(ல—வ—287)

## தேர்தலில்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

தேர்தல்கள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்த தேர்தல் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

இதற்கான திகதிகள் மிக விரைவில் தேர்தல் திணைக்களத்தினால் வெளியிடப்படும் எனவும் அவர் சொன்னார்.

தேர்தல்களின் போது முன்னரைப் போல் அல்லாது இனிமேல் விருப்பத் தேர்வு வாக்குகள் மூன்றினையும் ஒருவருக்கு அல்லது ஒரு இனப் பிரதிநிதிக்கு போட முடியும்.

இதே போன்று இதுகாலவரையும் இருந்து வந்த வெட்டுப் புள்ளி முறை நீக்கப்பட்டிருக்கிறது என்றும் அவர் கூறினார்.

(உ—கு)

## மாணவர்கள்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

பேருட் மேற்கிலிருந்து கிழக்கிலுள்ள தம் வீடுகளுக்கு சென்ற பிள்ளைகளும் ஆசிரியர்களுமே விபத்தில் சிக்கி இறந்தவர்கள்.

முஸ்லிம் படைகள் திடீர் தாக்குதல் ஆரம்பிக்க எதிர்த்தாக்குதல் நடத்தினர். கிறிஸ்தவப் படை

## இன்றைய திரைகளில்

புதவருட வெளியீடு!!

ஜெஸிமா [கிராண்ட்பாஸ்]
2-30, 6-00, 9-30

ரியோ [கொம்பனித்தெரு] (குளிரூட்டப்பட்டது)
10-00, 2-00, 6-00

வின்சர் [யாழ்நகர்]
10-30, 2-30, 6-00

சுவர் இல்லாத சித்திரங்கள், புதிய வார்ப்புக்கள்
மௌனகீதங்கள் புகழ்
பாக்யராஜ் — ஷோபனா
சோமயாஜுலு — மனோரமா
குமரிமுத்து நடித்த

### இது நம்ம ஆளு

[கலர்]

2 வது வாரம்

சமந்தா (கொட்டகொடை)
10-30, 2-30, 6-00, 9-00

கொன்கோட் (தெஹிவளை)
10-30, 2-00, 6-00, 9-00

ஸ்ரீதர் (யாழ்நகர்)
10-30, 2-30, 6-30

10 வருஷத்துக்கு முன்பு நடந்ததைச் சொல்லப்படும

### உற்பத்தி அதிகரிப்பு, அதிக தொழில் வாய்ப்பு

# வறுமை ஒழிப்பு மற்றும் வீண் விரயத்தை தடுப்பதில் கவனம் தேவை

### அமைச்சர்கள், செயலாளர்களுக்கு ஜனாதிபதி வலியுறுத்து

உற்பத்தியை அதிகரித்து மக்களின் வாழ்க்கையை

பாதிக்கப்பட்ட பொருளா

பாடசாலைகளுக்காக மடக்கி

கிழக்கு பிராந்திய பிரதி பொலீஸ் மாஅதிபர் திரு ரீ ஈ ஆனந்தராஜா தெரிவித்தார்-

[ந—கு]

## இம்தியாஸ் மாக்கார் இன்று கண்டியில்

கொழும்பு, ஏப்- 19

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் இன்று வெள்ளிக்கிழமை கண்டி பள்ளிவாசலுக்கு விஜயம் செய்கிறார்-

பள்ளிவாசலில் நடைபெற உள்ள கிராம எழுச்சி 90 கொண்டாட்ட நிகழ்ச்சியிலும் ஜனசக்தி மத்திய நிலையத்தையும் அமைச்சர் அதிகாரிகளுடன் சென்று பார்வையிடுவார்-

நோன்பு திறக்கும் வைபவத்திலும் பங்கு கொள்ளும் அமைச்சர் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் நிகழ்ச்சியில் கலந்து கொள்வார்-

(ந—07)

## விசேட பயான்

கொழும்பு, ஏப்- 19

பாணந்துறை கொட்டவத்தையில் அமைந்துள்ள ரமழானை முன்னிட்டு விசேட பயான் சொற்பொழிவு நிகழ்ச்சி இன்று வெள்ளிக்கிழமை இரவு நடைபெறும்-

கொட்டவத்தை பள்ளிவாசல் பரிபாலன சபையினர் இதனை ஏற்பாடு செய்துள்ளனர்-

மௌலவி ஏ அப்துர் ரஹ்மான் (பஹ்ஜி) - மௌலவி எம் [illegible] (ஹாமி), மௌலவி [illegible] (ரஷாதி) ஆகியோர் சொற்பொழிவு நிகழ்த்துவர்- (ந07)

உற்பத்தியை அதிகரித்து மக்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதிலும் தொழில் வாய்ப்புக்களை அதிகரிப்பதிலும் வறுமையை ஒழிப்பதிலும் வீண் விரயத்தைத் தடுப்பதிலும் கவனம் செலுத்த வேண்டும்-

அமைச்சர்கள், ராஜாங்க அமைச்சர்கள் அமைச்சு மற்றும் ராஜாங்க அமைச்சுச் செயலாளர்கள் ஆகியோரின் கூட்டமொன்றில் உரையாற்றிய ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச இப்படி வலியுறுத்தினார்-

ஜனாதிபதி செயலகத்தில் நேற்று முன்தினம் இந்தக் கூட்டம் நடைபெற்றது

ஜனாதிபதி அங்கு மேலும் கூறியதாவது—

மனித உழைப்பினதும் இயந்திரங்களினதும் அதிகக் கூடிய பயனைப் பெற சகல நடவடிக்கைகளையும் எடுக்க வேண்டும்-

அரசாங்கத்தின் அபிவிருத்தி நோக்கங்களை அடைவதற்காக ஊழியர்களின் நம்பிக்கையை பெறுவது முக்கியமாகும்-

எனவே ஊழியர்களின் நலனைக் கருத்தில் கொண்டு அமைச்சர்கள் நடவடிக்கை எடுக்க வேண்டும்-

ஆனால் இந்த விடயத்தில் திறைசேரியின் மீது அதிக பளுவைச் சுமத்தக் கூடாது-

அமைச்சுக்களை மறுசீரமைக்கும் [illegible] பணிகளைப் பற்றி நான் விரிவாக [illegible]-

[illegible] சொல்களினால் நாட்டின் பொருளாதார வளர்ச்சி [illegible] பொதுச் சேவைகள் சீர்குலைந்தமையும் [illegible] நிறைவேற்றப்படாமல் [illegible] இருந்ததை நான் கண்டேன்-

பாதிக்கப்பட்ட பொருளாதார வளங்களையும் பொதுச் சேவைகளையும் சீரமைக்க எமது காலத்தையும் சிரமத்தையும் வளங்களையும் கூடுதலாக செலவிட நேரிட்டது-

தற்போது நாட்டில் சகஜ நிலைமை விரைவாக ஏற்பட்டு வருகிறது- ச

எனவே அரசின் நோக்கங்களை நிறைவேற்றிக் கொள்ள சாதகமான சூழ்நிலைமை ஏற்பட்டுள்ளது-

இந்த அரசு தனித்தனி விடயங்களுக்காக தனித்தனி அமைச்சர்களை நியமித்து இருக்கிறது-

அந்தந்த விடயங்கள் தொடர்பாக கவனம் செலுத்தி அடையாளம் காணப்பட்ட விடயங்களுக்காக முகங்கொடுக்கும் வேலைகளை சரிசெய்படுத்துவதே இதன் நோக்கமாகும்-

த திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்கான பரண அதிகாரம் அமைச்சர்களுக்கு வழங்கப்படும்-

ஆரம்பத்தில் [illegible] ஜனாதிபதியினால் வழங்கப்பட்ட பணிகளை அமைச்சர்கள் செயல்படுத்த [illegible]-

நீங்கள் எதைச் செய்தாலும் எதைச் சொன்னாலும் அதனை [illegible] மனதில் வைத்துக் கொள்ளுங்கள்-

நான் [illegible] [illegible] அமைச்சர்களின் [illegible] உள்ளடக்கியுள்ளன-

அந்த [illegible] நிறைவேற்றுவதே எனது நோக்கமாகும்-

உங்கள் சொந்த [illegible] நானே பொறுப்பாளியாக இருப்பேன்- எனவே உங்கள் பொது [illegible] வாழ்க்கை [illegible] கூடாது [illegible] எவ்வகையிலும் பாதிக்கும்-

வட மேல் மாகாண சபை

பாடசாலைகளுக்காக மடக்கி வைக்கக் கூடிய புதியதோர் மேசையையும் கதிரையையும் அறிமுகப்படுத்தி இருக்கிறது-

தற்போது ஏனைய பாடசாலைகளில் பாவனையில் உள்ள மேசைக்காகவும் கதிரைக்காகவும் 800 ரூபா செலவாகிறது-

புதிய மேசைக்கும் கதிரைக்கும் 400 ரூபா மட்டுமே செலவாகிறது- இவற்றுக்கான இட வசதியும் குறைவாகிறது-

இதனை நிதர்சனமாக கொண்டு செலவைக் குறைக்கக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும்

உதாரணமாக இன்று அரச அலுவலகங்களில் நூற்றுக்கணக்கான படிவங்கள் புழக்கத்தில் இருக்கின்றன- ப

இவற்றில் நான்கில் ஒரு பகுதி மட்டும் இருந்தால் போதுமானதாகும்-

உங்களுடைய தனிப்பட்ட அதிகாரிகளின் எண்ணிக்கையையும் குறைத்துக் கொள்ள வேண்டும்

ஒரு அமைச்சருக்கு ஒரு அந்தரங்கச் செயலாளரும், ஒரு இணைப்புச் செயலாளரும் ஒரு மக்கள் தொடர்பு அதிகாரியும் இருந்தால் போதும்-

தனித்தனி விடயங்களுக்குப் பொறுப்பாக உள்ள கிட்ட அமைச்சர்களின் அதிகாரிகளின் எண்ணிக்கையும் இவ்வாறே அமைய வேண்டும்-

ராஜாங்க அமைச்சர் ஒருவருக்கு ஒரு அந்தரங்க செயலாளரும், ஒரு இணைப்புச் செயலாளரும் இருந்தால் போதுமானதாகும்-

இந்த அதிகாரிகள் உங்கள் நல்ல வேலைகளையும், கெட்ட வேலைகளையும் பிரதிபலிக்கும் கண்ணாடிகள் என்பதை மறந்து விடாதீர்கள்-

எனவே அவர்கள் நன்னடத்தை உள்ளவர்களாக இருக்க வேண்டும்-

இப்படி ஜனாதிபதி கூறினார்

[ல-ந-ற]

குதல் ஆரம்பிக்க எதிர்த்தாக்குதல் நடத்தினர்- கிறிஸ்தவப் படையினர் இவ்வேளையில் நடுவில் அகப்பட்ட பஸ் ஒன்றைப் பிடித்து தாமதப்படுத்தினர்-

சிதைந்த உடல்களை கண்ணீர் மல்க செஞ்சிலுவைச் சங்கத்தினர் அகற்றினர்-

கிழக்கு பெய்ரூட்டில் இராணுவ முகாமொன்றில் ஏற்பட்ட பாரிய வெடி விபத்தின் பின்னரே மேற்படி கோர விபத்து நடந்தது- இதில் சில இராணுவ அதிகாரிகள் இறந்தனர்-

இது பற்றி இன்னும் ஒரு செய்தியும் கிடைக்கவில்லை-

மேற்படி இராணுவ முகாமில் நடந்த வெடிவிபத்து ஒரு சதியாகும்- இதில் சில கிறிஸ்தவ இராணுவத்தினர் இறந்துள்ளனர்-

எனினும் வெடிமருந்தை நகர்த்தலின்போது விபத்து தற்செயலாக சம்பவித்தது என்று கிறிஸ்தவ தருப்பினர் கூறுகின்றனர்-

கடந்த சில தினங்களாக கிறிஸ்தவ, முஸ்லிம் படைகள் கடும் மோதல்களில் ஈடுபட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது-

(ல—எ—ரி)

## திறந்த வெளி...

[1 ஆ பக்கத் தொடர்ச்சி]

புகளுடன் இயங்கத் தொடங்கும்-

அதற்காக கொடைவள்ளல்கள் செல்வந்தர்கள், நலன் விரும்பிகள் ஆகியோரிடம் இருந்து உதவிகள் எதிர்பார்க்கப்படுகின்றன-

இதற்கு புறம்பாக மாணவர்களிடம் இருந்து பாடத் திட்டங்களுக்காக அறவிடப்படும் கட்டணத்தில் நூற்றுக்கு ஒரு சதவீதம் இந்த நிதியத்தில் வைப்புச் செய்யப்படும்-

பின்னர் இப்பணம் வங்கிக் கணக்கு ஒன்றில் வைப்புச் செய்யப்பட்டு, அதன் மூலம் கிடைக்கும் வட்டியைக் கொண்டு இந்த நிதியம் இயங்கும்-

நிதியத்திற்கு கிடைக்கும் உதவியின் அடிப்படையிலேயே, உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கையும் அதிகரிக்கப்படும் எனவும் அந்த அதிகாரி குறிப்பிட்டார்-

(ல-ர)

மிப்புப் படையை சந்தித்தோம்.

எமது மண் ஆக்கிரமிக்கப்பட்ட போது, எமது மக்கள் மீது முழு அளவிலான யுத்தம் ஏவி விடப்பட்ட போது எமக்காக குரல் கொடுக்கவோ, அல்லது எமக்கு உதவி அளிக்கவோ எந்த உலக நாடும் முன்வரவில்லை-

உலக வல்லரசுகளும் மூன்றாம் உலக நாடுகளும் இந்திய தலையீட்டை ஆதரித்து நின்றன-

ஜெயவர்த்தனா தலைமையிலான அன்றைய அரசும் இந்தியாவுடன் இணைந்து செயல்பட்டது-

எமது சகோதர இயக்கங்களும், எட்டப்பர்களாக மாறி இந்தியாவுக்கு துணை போயின

நாம் துணிந்து நின்று இந்திய தலையீட்டை எதிர்த்தோம், மிகப் பெரிய இராணுவத்தை எதிர்த்தோம்-

எமது தேசிய சுதந்திரத் தீயை அணைய விடாது போராடினோம்

### மக்களின் வெற்றி

இறுதியில் நாம் வெற்றி கண்டோம் இந்த வெற்றிக்கு காரணம் மனம் தளராத உறுதி சாவுக்கு அஞ்சாத எமது வீரம் சத்தியத்திலும், தர்மத்திலும் எமக்குள்ள நம்பிக்கை-

இந்த வெற்றியானது தமிழீழ மக்களான உங்கள் வெற்றி உங்கள் குழந்தைகளான எமது போராளிகளின் வெற்றி உங்கள் இயக்கமான விடுதலைப் புலிகள் இயக்கத்தின் வெற்றி-

இந்திய வல்லாதிக்கம் விடுத்த சவாலை வெற்றி கொண்டு இன்று எமது விடுதலை இயக்கம் ஒரு புதிய வரலாற்றுத்திருப்பத்


10 வருஷத்துக்கு முன்பு நடந்ததாகச் சொல்லப்படும் ஒரு உண்மைக் கதை
ரஜனிகாந்த் — ராதிகா
ரகுவரன் — சித்ரா
பாண்டியன் — மூர்த்தி
நடித்த
சத்யா மூவிஸ்
ஊர்க்காவலன்
(கலர்)

12 வது வாரம
விடோ
(யாழ்நகர்)
10-30, 2-30, 6-30
விஜயா
(மட்டுநகர்)
2-30, 6-30, 9-30
பிரபு - அமலா
சிறுவன் மீனுராஜ் நடித்த
பூ...
பூவா
பூத்திருக்கு
(கலர்)

19 வது வாரம
ராஜா
(யாழ்நகர்)
10-30 2-30 6-00
சாந்தி
(மட்டுநகர்)
2-30, 6-30, 9-30
ரஜனிகாந்த்
(இரட்டை வேடம)
ராதா நதியா
நடித்த
ராஜாதி ராஜா
(கலர்)

இசைக்கு ஏற்ப பாட்டமைப்பதை விட

# பாடல்களுக்கு ஏற்ப இசை அமைப்பது சிறந்தது

### கே. வி. மகாதேவன் கூறுகிறார்

"இசைக்கு ஏற்ப பாட்டமைப்பது" என்பதை விட "பாட்டுக்கு ஏற்ப இசையமைப்பது" தான் சிறந்தது என்பது என் கருத்து. இதைத் தான் இன்றும் நான் கடைப்பிடித்து வருகிறேன்.

பழம்பெரும் இசையமைப்பாளர் கே வி மகாதேவன் நமது நிருபரிடம் இவ்வாறு கூறியுள்ளார். அவர் தெரிவித்த மேலும் பல விவரங்கள் வருமாறு:

இதே போல பாட்டின் அமைப்புக்கும் அது வரும் சந்தர்ப்பத்திற்கும் ஏற்ப இசைக் கருவிகளைத் தேர்ந்தெடுத்தால் போதுமானது என்ற அபிப்பிராயத்தைக் கொண்டவன் நான்.

தயாரிப்பாளர் வசதி படைத்தவர் என்பதற்காக அளவிற்கு மீறிய இசைக் கருவிகளைப் பயன்படுத்துவதை விரும்பாத நான் தேவைக்கு ஏற்ப இசைக் கருவியைக் குறைத்துக் கொள்ளவும் மாட்டேன். விளக்கமாகச் சொல்ல வேண்டுமானால் இப்படிச் சொல்லலாம்.

கதையில் ஒரு பாத்திரம் மாடியிலிருந்து இறங்குகிறார். வசனம் இல்லாத அந்த இடத்தில் பின்னணியில் இசையை அமைத்து அந்தக் காட்சியின் மோன நிலையில் சிறிது பிடிப்பையும் கவர்ச்சியையும் உண்டாக்கலாம்.

ஒரு தபலாவோ ஹார்மோனியமோ எதைக் கொண்டும் இசை அமைக்கலாம்.

பாட்டுக்கு மெட்டமைப்பதின் மூலம் அமைப்பவரது வேலை



மகாதேவன்

முழுமை பெற்று விடுவதில்லை. அந்தப் பாட்டின் கருத்து மெட்டு சோபிக்க வேண்டுமானால் அக்காட்சியின் அமைப்பும் படமாக்கப்படும் விதமும் கவனிக்கப்பட வேண்டும்.

நல்ல கருத்துள்ள பாடல் சிறந்த மெட்டுடன் அமைக்கப்பட்டும் அது சரிவர படமாக்கப்படா விட்டாலோ சரியான இடத்தில் சேர்க்கப்படா விட்டாலோ சோபிக்காமலே போய் விடுவதுண்டு.

அதேபோல் சிறந்த கருத்தும் அமைப்பும் கொண்ட பாடலை தக்கபடி பயன்படுத்துவதன் மூலம் அக்காட்சி பெரிதும் சோபிப்பதுடன் ரசிகர்கள் மனதிலும் பல ஆண்டுகள் நிலைத்து நிற்கும் தன்மையைப் பெற்று விடுகிறது.

"தை பிறந்தால் வழிபிறக்கும்" படத்தில் "மண்ணுக்கு மரம் பாரமா?" "வண்ணக்கிளி"யில் "அடிக்கிற கைதான் அணைக்கும்" – "படிக்காத மேதை"யில் "எங்கிருந்தோ வந்தான்" போன்ற பாடல்களை இதற்கு சில உதாரணங்களாகக் கூற முடியும்.

இசை அமைக்கும் போது தான் முந்தைய படங்களில் அமைத்த இசை பற்றியும் நினைவு படுத்திக் கொள்வது நல்லது.

தாலாட்டுப் பாட்டு பல படங்களில் வருகின்றது. ஒரு இசை அமைப்பாளர் பல பாடல்களுக்கு மெட்டமைத்திருப்பார்.

ஆகவே தாலாட்டு மெட்டு அமைக்கும் போது முந்தைய தாலாட்டு பாட்டுக்களின் மெட்டை நினைவுபடுத்திக் கொண்டால் புதுமை தோன்ற இடமிருக்கிறது.

கே வி மகாதேவன் இவ்வாறு கூறினார். (இ—10)

## புதுமுகங்களின் "அன்புள்ள தெய்வம்"

எம ஏ ஜே புரொடக்ஷன்ஸ் என்னும் புதிய பட நிறுவனம் தயாரிக்கும் படம் "அன்புள்ள தெய்வம்".

இந்த படத்தில் புதுமுகங்கள் அமஜத் – குன்யா ஜோடியாக நடிக்க மேஜர் சுந்தரராஜன், பிரமிளா ஜோஷி, மனோரமா ஆகியோரும் நடிக்கிறார்கள்.

பி என் குலசேகர் ஒளிப்பதிவு செய்ய கதை திரைக்கதை வசனம் எழுதி டைரக்ட் செய்கிறார் அமஜத்.

இந்த படத்தை அப்துல்ஜப்பார் தயாரிக்கிறார்.



பொன் நகைகளைப் போல் புன்னகையும் பெண்ணுக்கு பெருமை தரக் கூடியதுதான். அனால் அதற்கும் அளவு

# மாத்தளை தமிழ் முஸ்லிம் மக்களுக்கு வீடமைப்பு திட்டம்

கண்டி ஏப் 18

மாத்தளை நகரில் வாழும் தமிழ், முஸ்லிம்கள் இட நெருக்கடியால் பாதிக்கப்பட்டிருப்பதால் அவர்களின் நலனுக்காக நடுத்தர வீடமைப்புத் திட்டம் ஒன்றை செயற்படுத்தக் கோரி விடுக்கப்பட்ட தீர்மானம் சிறு திருத்தங்களுடன் மத்திய மாகாண சபையினால் ஏற்றுக் கொள்ளப்பட்டது.

மத்திய மாகாண சபையின் முதலாவது தொடர் கூட்டத்தின் இறுதி அமர்வு கண்டி குயீன்ஸ் ஹோட்டல் மண்டபத்தில் இடம்பெற்றது.

கூட்டத்துக்கு பிரதித் தலைவர் திரு பீட்டர் சுநுகஹகெதர தலைமை தாங்கினார்.

அங்கு முன்னறிவித்தலுடன் மாத்தளை மாவட்ட உறுப்பினர் ஜனாப் ஐ எம அத்ஹம (ஸ்ரீ ல மு கா) தீர்மானத்தை முன்மொழிந்து பேசுகையில்,

பன்நெடுங்காலமாக மாத்தளை முஸ்லிமகள் ஏனைய இன மக்களுடன் ஐக்கியம், புரிந்துணர்வு ஆகியவற்றுடன் வாழ்ந்து வருகிறார்கள். ஆனால் மாத்தளை மாவட்டத்தில் உருவாக்கப்பட்ட பல்வேறு வீடமைப்புத் திட்டங்களில் முஸ்லிமகளுக்கு காணிகளோ அன்றி வீடுகளோ பெற்றுக் கொடுக்கப்படவில்லை.

மாத்தளை நகரில் முஸ்லிமகள் வாடகை வீடுகளில் இட நெருக்கடியால் அல்லல்படுகிறார்கள். அவர்களின் வசதிக்காக நடுத்தர வீடமைப்புத் திட்டம் ஒன்று அவசியம்.

இதே போன்று தமிழ் மக்களும் சிரமத்துக்குள்ளாகி இருக்கின்றனர். இந்நிலையில் புதிய வீடமைப்புத் திட்டம் ஒன்றை நிறுவ மத்திய அரசாங்கத்தை இந்தச் சபை கோர வேண்டும். என்றார்.

பிரஸ்தாப தீர்மானத்தை ஸ்ரீ ல மு காங்கிரஸின் உறுப்பினர்கள் குழுத் தலைவர் சட்டத்தரணி ஜனாப் எச் எம பாருக் வழி மொழிந்தார்.

மாத்தளை நகரில் சிங்கள, தமிழ் முஸ்லிம மக்களும் இதே நிலையில் பாதிக்கப்பட்டுள்ளதால் சகலருக்கும் பொதுவான வீட்டுத் திட்டம் ஒன்றை நகரில் உருவாக்கி அவற்றை இன விகிதாசார அடிப்படையில் பகிர்ந்தளிக்க வேண்டும என சபையில் தெரிவிக்கப்பட்டது. இந்தத் திருத்தத்துடன் தீர்மானம ஏகமனதாக நிறைவேறியது.

(ல-017)

## புகையிலை உற்பத்திக்கு சலுகைகள்

கொழும்பு ஏப் 19

புகையிலை உற்பத்தியாளர்களுக்கு இவ்வருடம மேலும பல சலுகைகள் வழங்கப்படும.

இலங்கை புகையிலை நிறுவனம விவசாயிகளுக்கு இலவசமாக விதைகளை வழங்குகிறது. அத்தோடு வங்கிகள் மூலம கடன் வசதிகள் பெறவும உத்தரவாதம அளித்துள்ளது.

உரம மற்றும விவசாய இரசாயன பொருள்களை கொள்வனவு செய்வதற்கான குறுகிய கால கடன் வழங்கும திட்டத்தையும நிறுவனம கொள்வனவு செய்யப்படும புகையிலையின் விலைக்கும உத்தரவாதம அளிக்கப்பட்டிருக்கிறது.

உற்பத்தி அதிகரிப்பின் செலவைக் கணித்து, புகையிலையின் உத்தரவாத விலையை வருடாந்தம அதிகரிப்பதிலும நிறுவனம கவனம செலுத்துகிறது.

புகையிலை நிறுவனம 19 அயிரத்துக்கும அதிகமான சிறு சொந்தக்காரர்களிடம இருந்தும, பதிவு செய்யப்பட்ட 2 ஆயிரத்து 500 விவசாயிகளிடம இருந்தும புகையிலையை கொள்வனவு செய்கிறது. (ந-ங)

## மாணவர்களை பாராட்டி ஊக்கப்படுத்த வேண்டியது ஆசிரியரது கடமை

### மட் பிரதிக் கல்வி பணிப்பாளர்

மட்டக்களப்பு ஏப் 18

"கல்வியிலே ஆர்வம மிக்க மாணவர்கள் பரீட்சையில் சிறந்த பெறுபேறுகளைப் பெறும்போது அவர்களைப் பாராட்டி உற்சாகப்படுத்த வேண்டியது ஆசிரியர்களதும பெற்றோரதும முக்கிய கடமையாகும".

மட்டக்களப்பு பிரதிக் கல்விப் பணிப்பாளர் திரு கே சோமசுந்தரம இவ்வாறு கூறினார்.

மட்டக்களப்பு சர்வோதய இயக்கத்தின் அனுசரணையுடன் பொது நூல் நிலையம கேட்போர் கூடத்தில் அண்மையில் பரிசளிப்பு விழா ஒன்று நடந்தது.

இவ் விழாவில் பேசுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இவ் வைபவத்துக்கு மாநகர ஆணையாளர் திரு கே கார்த்திகேசு தலைமை வகித்தார்.

இங்கு பிரதிக் கல்விப் பணிப்பாளர் மேலும கூறியதாவது

5ஆம வகுப்பு புலமைப் பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் பெற்ற மாணவர்களுக்கு மட்டக்களப்பு பொது நூல் நிலையம பரிசு வழங்கிப் பாராட்டுவது வரவேற்கத்தக்கதாகும" என்றார்.

மாநகர சபை ஆணையாளர் திரு கே கார்த்திகேசு பேசுகையில் "மாணவர்களின் கல்வி அபிவிருத்திக்கு மாநகர சபை மேலும பல திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும" என்றார்.

கலைஞர் மாஸ்டர் சிவலிங்கம உரையாற்றுகையில், மாணவர்களின் கலை ஆற்றலை வெளிப்படுத்துவதற்கு ஆசிரியர்கள் ஆவன செய்ய வேண்டும என்றார்.

பொது நூல் நிலைய நூலகர் திரு சி சின்னராசா உரையாற்றுகையில், பொதுநல மன்றங்கள் பொது நூலக நடமாடும் விஸ்தரிப்புச் சேவையை சிறப்புற நடத்த உதவ வேண்டும என்றார். [இ-மு]

# 2 மணி நேரத்தில் நிலுவைப் பணம்

அல்—உஸ்வதுல் ஹஸனஹ் அரபிக் கல்லூரி

மாயவெல – மெல்சிரிபுர

இந்த படத்தை அப்துலஜப்பார் தயாரிக்கிறார்—

அமஜத் - கன்யா சமபந்தப்பட்ட காட்சிகள் மைசூர், மெர்க்காரா, சாமுண்டீஸ்வரி ஹில்ஸ் ஆகிய இடங்களில் அண்மையில் படமாக்கப்பட்டன— (இ—10)

பொன் நகைகளைப் போல் புன்னகையும பெண்ணுக்கு பெருமை தரக் கூடியதுதான்— ஆனால் அதற்கும அளவு வேண்டாமா? ஆழமாக பார்த்து அன்பு கொண்ட இரு உள்ளங்கள் இணையும போது ஏற்படும ஆனந்தத்திற்கு எல்லையே இல்லை என்பதை இவர்கள் உணர்த்துகின்றனர்—

[அனில் கபூர் - கிரன்] [படம— ப்ரியா ஓ ப்ரியா]

(இ—10)

மலையாள டைரக்டர்!

# பிரியதர்ஷன் இயக்கத்தில் கார்த்திக்—பானுபிரியா ஜோடி

அருள்நிதி பிலிமஸ் திரைப்பட நிறுவனம மிகுந்த பொருட் செலவில் படம ஒன்றைத் தயாரிக்க ஏற்பாடு செய்துள்ளது.

கார்த்திக் நடிக்கும இந்தப் படத்தில் அவருடைய காதல் ஜோடியாக பானுபிரியா நடிக்கிறார்.

இதில் ஜனகராஜும நடிக்கிறார்.

இளையராஜா இசை அமைக்க, சினிவாசன் கதை எழுதுகிறார். ஒளிப்பதிவு- பி சி ஸ்ரீராம.

திரைக்கதை அமைத்து டைரக்ட் செய்கிறார் பிரியதர்ஷன்.

இன்றைய மலையாளப் படஉலகின் பிரபல டைரக்டர்களில் பிரியதர்ஷன் ஒருவர். இளைஞரான இவர் டைரக்ட் செய்து திரைக்கு வந்த "தாளவட்டம", "ஆர்யன்", "சித்ரம" ஆகியவை பெரும வெற்றி பெற்றன.

"ஆர்யன்" படம, கொச்சின் நகரில் உள்ள ஒரு தியேட்டரில் 3 காட்சிகளாக தொடர்ந்து 365 நாட்கள் ஓடியது. இவர் டைரக்ட் செய்யும முதல் தமிழ் படம அருள்நிதி பில்மஸ் தயாரிக்கும இந்தப் படமாகும.

பி எஸ் சுப்பையா தயாரிப்பு மேற்பார்வையில் பட்டுக்கோட்டை சுவாமிநாதன் தயாரிப்பு நிர்வாகத்தில் உருவாகும இந்தப் படத்தை மு க தமிழரசு, எம வேதா தயாரிக்கிறார்கள்.

ஏப்ரல் மாதம முதல் வாரத்தில் படப்பிடிப்பு தொடங்கியது.

நாகர்கோவில், ஊட்டி, குன்னூர் பகுதிகளில் 2 கட்டமாக முழுப்படப்பிடிப்பும நடைபெற்று முடிவடையும.

சுதந்திர தினமான ஆகஸ்ட் மாதம 15ஆம திகதி படத்தை திரையிட அருள்நிதி பிலிமஸார் திட்டமிட்டு உள்ளனர்.

(ந-10)



பானுபிரியா

தினபதி சினிமா

# நிலுவைப் பணம் ரூ. 42,000 வசூல்

புத்தளம் ஏப் 18

புத்தளம நகர சபையின் வருவாய்த்துறைப் பிரிவினர் மேற்கொண்ட திடீர் வேட்டையின் மூலம இரண்டு மணித்தியாலயத்திற்குள் சுமார் (42) நாற்பத்திரண்டு ஆயிரம ரூபா நிலுவைப் பணம வசூல் செய்யப்பட்டது—

இச் சாதனை புத்தளம நகர சபையின் கடந்த கால சரித்திரத்திலேயே நடைபெறவில்லையென தெரிவிக்கப்பட்டுள்ளது—

இது சமபந்தமாக மேலும கூறப்படுவதாவது;—

1989 ஆம ஆண்டுக்கான வாடகை நிலுவைகளை செலுத்தாத நகர சபைக்குச் சொந்தமான வர்த்தக நிறுவனஙகள் மீது நிலுவைகளை வசூல் செய்ய திடீர் நடவடிக்கை எடுக்கப்பட்டது—

பலமுறை முன்னறிவிப்பு செய்தும தமது வாடகை நிலுவைகளை செலுத்தாத பொது மார்க்கட், மீன் மார்க்கட், நவீன சந்தைத் தொகுதி, சில்லறைக் கடைகள் மீது இத் திடீர் வேட்டை நடத்தப்பட்டது—

இதன் பயனாக வசூலுக்குச் சென்ற சுமார் இரு மணி நேரத்துக்குள் சுமார் 42 ஆயிரம ரூபா பணம வசூல் செய்யப்பட்டது—

நகர சபையின் வருவாய்த்துறை அதிகாரி திரு ஏ ஏ குலாஸ், [முன்னார்] வருவாய்த்துறை துணை அதிகாரி திரு பீ ஏ சிரிபால, திரு பீ சீ ரொட்ரிகோ, ஜனாப் ஏ சீ நவ்ஷாத் ஆகியோரைக் கொண்ட குழுவினரே மேற்படி வேட்டையில் ஈடுபட்ட குழுவினராவர்—

[இ—241]

# கிணற்றில் குளித்தவர் வழுக்கி விழுந்து மரணம்

கொழுமபு ஏப் 19

கிணற்றில் குளித்துக் கொண்டிருந்த ஒருவர் சவர்க்காரத்தினால் வழுக்கி கிணற்றில் வீழ்ந்து மரணமானார்—

கொழுமபு மருதானை ஜயந்த வீரசேகர மாவத்தையைச் சேர்ந்த மொஹமட் ஹுசைன் (வயது 48) என்பவரே இவ்வாறு மரணமானவர்—

இவரது மரண விசாரணை கொழுமபு பெரியாஸ்பத்திரியில் கொழுமபு நகர திடீர் மரண விசாரணை அதிகாரி திரு எலோய் பெரேரா முன்னிலையில் நடைபெற்றது—

கொழுமபு பெரியாஸ்பத்திரியின் பிரதான சட்ட வைத்திய அதிகாரி டாக்டர் எம எஸ் சல்காது பிரேத பரிசோதனையை நடத்தினார்—

விசாரணை முடிவில் நீரில் மூழ்கி மூச்சுத் திணறியதால் ஏற்பட்ட திடீர் விபத்து மரணம என தீர்ப்பளிக்கப்பட்டது—

[ல—வ]


மாய்வெல — மெல்சிரிபுர

**புதிய மாணவர்களைச் சேர்த்தல்**

1990 ஆம ஆண்டிற்கான புதிய மாணவர்கள் சேர்த்துக் கொள்ளப்படவிருக்கிறார்கள்— கிதாபு பிரிவிற்கு ஜி சி ஈ சாதாரண தரப் பரீட்சையில் தேறியவர்களிடமிருந்தும குர்ஆன் மனன வகுப்பிற்கு 6 ஆம வகுப்பு சித்தியடைந்தவர்களிடமிருந்தும எதிர்வரும 1990-04-30 ஆந் திகதிக்கு முன்பதாக விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன—

இப்படிக்கு,
அதிபர்



**தமிழ் நூல்களும் இஸ்லாமிய நூல்களும்**

**இலங்கையிலும் வெளிநாட்டிலும் அச்சிடப்பட்ட தமிழ் — இஸ்லாமிய நூல்கள் தொடர்பான உங்கள் தேவைகளுக்கு விஜயம் செய்யுங்கள்**



**எம். டி. குணசேன அன்ட் கம். லிமிட்.**

217. ஒல்கொட் மாவத்தை
கொழும்பு—11.
தொலைபேசி- 23981—84.

தினபதி
தந்தி "தினபதி" கொழும்பு
தொலைபேசி
23882, 23884, 23864
தபால் பெட்டி இல- 1613
சுடர் 18 கதிர் 4463
— 1990 ஏப்ரல் 20 —

# முன்னேஸ்வரம் ஆலயத்தில் 3 ஆவது கோடியர்ச்சனை

## 100 நாட்கள் நடைபெறும்

இவ்வழிபாட்டில் கோளாறு பதிகம் முக்கிய இடம் வகிக்கிறது- அதற்கு சிகரம் வைத்தாற்போன்றது கோடியர்ச்சனை-

முன்னேஸ்வரம் ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னைநாதர் ஆலயத்தில் தற்போது மூன்றாவது தடவையாக கோடியர்ச்சனை நடைபெறுகிறது-

முன்னைநாதர் ஆலயத்தின் பிரதம குருவாக இருந்த சிவபதமெய்திய எஸ் பாலசுப்பிரமணியக் குருக்கள் முன்னேஸ்வரத்தில் முதலாவது கோடியர்ச்சனையை 23-10-61 இல் ஆரம்பித்து வைத்தார் இடையீடின்றி 5-2-62 வரை அது நடைபெற்றது-

பின்னர் ஸ்ரீ முன்னேஸ்வர தேவஸ்தான தர்மகர்த்தா கே இரத்தின கைலாசநாத குருக்களின் முயற்சியினால் 1971 ஆம் ஆண்டு இரண்டாவது முறையாக கோடியர்ச்சனை நடந்தது-

தற்பொழுது மீண்டும் நாட்டின் நலன் கருதி மூன்றாவது முறையாக கோடியர்ச்சனை நடைபெறுகிறது-

இலங்காபுரியில் அகண்டாகார நித்திய வியாபக சச்சிதானந்தப் பிழம்பாகிய சிவபெருமான் தம்மை ஆன்மாக்கள் வழிபட்டுய்யும் பொருட்டு திருக்

**எஸ். ஜீவகலா**

கோவில் கொண்டு எழுந்தருளி இருக்கும் அற்புத தலங்களுள் மிகச் சிறந்து விளங்குவது-


பிரமாதி தேவர்கள் இராமபிரான் வியாஸ முனிவர் முதலியோர் பூஜித்து பெரும்பேறு பெற்றது-

ஸ்ரீ சங்கபோதி பராக்கிரமபாகு கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் முதலிய இலங்கை மன்னர்கள் வழிபட்டு அருள்பெற்றது-

சிவபுராண சனத்குமார ஸங்கிதையிற் கூறும் அலகேஸ்வரமென பெயர் பெற்றது-

ஸ்ரீ தேவிபீடம் அறுபத்து நான்கினுள் ஒன்றென ஆராய்ச்சியாளரால் வியந்து கூறப்படும் ஸ்ரீ லங்கா பீடம்-

சமய பேதமின்றி எச்சமயத்தவரும் வழிபாடு செய்து வரும் திருக்கோயில் ஸ்ரீ முன்னேஸ்வர சேக்ஷத்திரம் ஆகும். இத்திருக்கோவிலில் எழுந்தருளியிருக்கும் ஸர்வாபீஷ்டவரத ஸ்ரீ வடிவாம்பிகா ஸமேத முன்னைநாத சுவாமி சன்னிதானத்தில் சிவசக்தி ஐக்கிய ரூப ஸ்ரீ மேரு யந்திரத்திற்கும் ஸ்ரீ வடிவாம்பிகா தேவிக்கும் பிரதி தினமும் லட்சார்ச்சனையாக 100 நாட்களுக்கு கோடியர்ச்சனை செய்யத் திருவுளம் பாலித்திருக்கிறது-



அடியார்கள் லோகபீடா நிவாரணமாம் இம்மாபெரும் கைங்கரியத்திலீடுபட்டு அவரவர் நட்சத்திர இராசி திசாதோஷங்களை நிவர்த்தி செய்துகொள்ள வழி ஏற்பட்டிருக்கிறது-

கடந்த செவ்வாய்க்கிழமை 17 ஆம் திகதி ஆரம்பித்த இந்த மூன்றாவது கோடியர்ச்சனை 100 நாட்களுக்கு நடைபெற்று ஜூன் 25ஆம் திகதி நிறைவுறும்-

பின்னர் நைவேத்தியம் படைத்து மேளவாத்தியங்கள் முழங்க மணிகள் ஒலிக்க பதினைவரும் ஒரே நேரத்தில் பஞ்சாலாத்தி எடுக்கும்போது அன்பர்கள் பக்தி வெள்ளத்தில் திளைத்துப் பரவசமுறுவர்-

## வெள்ளி விருந்து

இதன்படி மே மாதம் முடியும் வரை அதாவது முதல் 45 நாட்களுக்கான பூஜைகள் பக்தர்கள் மத்தியில் பங்கிடு செய்யப்பட்டுள்ளன- மிகுதி 55 நாட்களின் பூஜை பங்கிடு தற்போது நடைபெறுகிறது-

ஸ்ரீ மகா மேருயந்திரத்தை ஸ்ரீ வடிவாம்பிகா தேவியின் சந்நிதானத்தில் மேள வாத்தியத்துடன் எழுந்தருளச் செய்து இலட்சார்ச்சனை ஆரம்பமாகின்றது

ஒருவர் லலிதா சகஸ்ர நாமத்தை ஓத பதினைந்து பிராமணர் ஒழுங்காக இருந்து குங்குமார்ச்சனை செய்வர்-

அதன் பின்னர் யந்திர பூசையும் விசேட பூசையும் நடைபெறும்- விசேட பூசையின்போது பதினைந்து குருக்கள்மாரும் ஒருங்கு சேர்ந்து யாக பூசை செய்வர்-

பூகோள அமைப்பின்படி இலங்கைக்கு உரிய ராசியான மகர ராசியில் முன்னர் 5-2-1962 இல் அஷ்ட கிரக சேர்க்கையின் போது இருந்ததைப் போன்று சனி பகவான் தற்பொழுது இருப்பதனால் இக்கோடியர்ச்சனை மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக கருதப்படுகிறது.

[ம]

## அவசரகால சட்ட விதிகள் நீக்கம்

மேலும் சில அவசரகாலச் சட்ட விதிகளை அரசாங்கம் நேற்று முன்தினம் நள்ளிரவிலிருந்து நீக்கி விட்டது.

அதனால் இப்போது பொதுக் கூட்டங்களை நடத்துவதற்கு தடை இல்லை. சொத்துகள், காணிகள், வாகனங்கள் ஆகியவற்றை எடுத்தல் மற்றும் ஆட்களைத் தடுத்து வைத்தல் தொடர்பான விதிகளும் நீக்கப்பட்டுள்ளன. விரும்பியவர்கள் சரண் அடைவதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது.

இளைஞர் அமைதியின்மை பற்றி ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு செய்த 51 சிபார்சுகளில் ஒன்று, கூடிய விரைவில் அவசரகாலச் சட்டங்கள் நீக்கப்பட வேண்டும் என்பதாகும்.

இந்த சிபார்சை அரசாங்கம் ஏற்றுக் கொண்டு கடந்த பெப்ரவரி 15 ஆம் திகதி மிகவும் மோசமானவை எனக் கருதப்படும் 6 அவசர காலச் சட்ட விதிகளை நீக்கியது.

இறந்தவர்களின் சடலங்களை மரண விசாரணையின்றிப் புதைப்பது அல்லது எரிப்பது —

அரசியல் கட்சிகளையும் நிறுவனங்களையும் தடை செய்தல் —

வெளியீடுகளைக் கட்டுப்படுத்தல் —

சர்வ கட்சி மாநாட்டு நிகழ்ச்சிகளைப் பிரசுரித்தல் —

ரயிலில் அல்லது பஸ்ஸில் டிக்கட் இல்லாமல் பிரயாணம் செய்தல் தொடர்பான

## எது காரணம்...

[1 ஆம் பக்கத் தொடர்ச்சி]

கடந்த காலங்களில் மக்கள் கஷ்டங்களையும் துன்பங்களையும் அனுபவித்தனர்-

எதிர்காலத்தில் மக்கள் எங்களிடம் என்ன எதிர்பார்க்கிறார்கள் என்பது எங்களுக்கு தெரியும் புலிகள் ஆயுதங்களை ஒப்படைப்பார்கள் என்று இன்று பரவலாக பலரும் எதிர்பார்க்கின்றனர்-

வரலாற்றுக் கடமையின் நிமித்தமே நாம் ஆயுதங்களை தூக்கினோம்- இந்த ஆயுதங்களை நாம் கீழே வைப்பதானால் அதற்கு சரியான அர்த்தம் இருக்க வேண்டும்- இப்படி அவர் கூறினார்-

1815 இல் பிரிட்டிஷார் இலங்கை முழுவதையும் கைப்பற்றிய நாளிலிருந்து நாடு அரசியல் சுதந்திரம் அடைந்த 1948 வரையும் —

பின்னர் 1948 முதல் இன்று வரையும் கிழக்கில் நிலைமையை

சன் மண்டேலா, யாசிர் அரபாத் ஆகியோரர் வரிசையில் வைத்து அவரை முதல் தரமான தலைவர்" என்றது-

அந்த தலைவரின் கீழ் இன்று நாம் அணி திரண்டு நிற்கின்றோம்-

கணவரை போருக்கு அனுப்பினாள் மனைவி என்றும் மகனை போருக்கு அனுப்பினாள் தாய் என்றும் பழைய இலக்கியங்களில் படித்துள்ளோம்-

ஆனால் களத்தில் பெண் புலிகளை ஆயுதங்களுடன் உலவ விட்டார் எமது தலைவர் பிரபாகரன் ஒருவர்தான்- 27 பெண் புலிகளை நாம் களத்தில் பறிகொடுத்துள்ளோம்- இந்த வீர வரலாற்றை வேறு எங்கும் காண முடியாது-

ராஜீவ் காந்தியை நம்பியோர் இன்று ஒரிஸாவில் படும்பாடு பெரும்பாடு-

ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் இருந்த திரு இதம்பரம

அமைதி வந்து விட்டது என்ற போலியான தோற்றத்தை உருவாக்கினர்- ஆனால் இங்கு அமைதி வரவில்லை- சுபீட்சம் கிடைக்கவுமில்லை-

மாகாண அரசை கலைத்து நியாயமான ஒரு தேர்தலை உலகம் காண நடத்த வேண்டும்-

மாகாண அரசை நாம் ஒரு இடைக்கால நிர்வாகவே கருதுகிறோம்- 6 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை நீக்கினால் தான் நாம் மாகாண சபைத் தேர்தலில் குதிப்போம்- அதன் பின்னர் பேச்சுவார்த்தை மூலம் எமது பிரச்சினைகளை தீர்ப்போம்-

இப்படி திரு ரூபன் கூறினார்-

தம்பலகாமம் அரசியல் பொறுப்பாளர் ரவி மாஸ்டர் முன்னணியைச் சேர்ந்த செல்விகள் சுந்தரி, கீதா ஆகியோரும் உரை நிகழ்த்தினர்- (உ-வு-287)

துள்ளனர்- [ல—431]

## முஸ்லிம்

## சாரணர் இயக்கங்களை விஸ்தரிக்க நடவடிக்கை

மாத்தறை மாவட்டத்தில் உள்ள பாடசாலைகளில் சாரணர் இயக்கங்களை மேலும் விஸ்தரிக்க மாத்தறை மாவட்ட கல்வித் திணைக்களம் நடவடிக்கை எடுத்துள்ளது-

இத் திட்டத்தின் மூலம் 250 பாடசாலைகளில் சாரணர் இயக்கங்களை ஏற்படுத்தவும் நடவடிக்கை எடுக்கப்படும்-

மேலும் அடுத்த விடுமுறையின் போது 450 ஆசிரியர்களுக்கு சாரணர் இயக்க நடவடிக்கைகளில் பயிற்சி வழங்கவும் திட்டமிடப்பட்டுள்ளன-

புதிதாக நியமிக்கப்பட்ட பயிற்சி ஆசிரியர்களிலிருந்து இந்த 450 ஆசிரியர்களும் தெரிவு செய்யப்படுவர்-

[இ—430]

அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவை

பேரவையின் ஆறு முன்னாள் தேசியத் தலைவர்களைக் கௌரவித்தது.

பேரவையின் ஸ்தாபகர்களான இந்த



## செய்தித் திரட்டு

### புலமைப் பரிசில் வழங்கும் திட்டம்

நாத்தாண்டி, ஏப். 18

சித்திரம் சங்கீதம் நடனம் போன்ற கலைகளில் திறமை காட்டும் பாடசாலைப் பிள்ளைகளுக்குப் புலமைப் பரிசில் வழங்கும் திட்டமொன்றை அமுல் படுத்துவதற்கு வட மேல் மாகாண சபை தீர்மானித்துள்ளது-

தேர்ந்தெடுக்கப்படும் மாணவ, மாணவிகளுக்குத் தங்குமிட வசதி செய்து கொடுக்கப்படும். மாதாந்தம் ஒரு தொகைப் பணமும் வழங்கப்படும்.

ணம செய்தல் தொடர்பான சட்ட விதிகளே முன்னர் நீக்கப்பட்டன.

அவசர காலச் சட்ட விதிகள் மக்களின் சுதந்திரத்தைக் கட்டுப்படுத்துகின்றன. ஜனநாயகம நல்லபடியாகச் செயற்படுவதற்கு இடைஞ்சலாகவும இருக்கின்றன.

எனவே அவற்றை ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாச நாட்டு நிலைமையை அனுசரித்து படிப் படியாக நீக்கி வருவது வரவேற்க வேண்டியதும பாராட்டப்பட வேண்டியதுமாகும.

ஜனாதிபதி திரு. ஆர் பிரேமதாச ஜனநாயகத்தில் மிகுந்த நமபிக்கை கொண்டவர்.

பல ஆண்டு காலமாக அமுலில் இருந்து வந்த அவசரகாலச் சட்டத்தைத் தாம பதவிக்கு வந்ததும ஜனாதிபதி பிரேமதாச நீக்கி விட்டார்.

அவர் மிக விரைவில் எஞ்சியுள்ள அவசரகாலச் சட்ட விதிகளையும நீக்குவார் என்றே எல்லோரும நமபுகிறார்கள்.

அவசரகாலச் சட்ட விதிகளைச் சுமமா கண்ணை மூடிக் கொண்டு நீக்கிவிட முடியாது. அப்படிச் செய்வது பாரதூரமான விளைவுகளை ஏற்படுத்தலாம.

நாட்டில் பாதுகாப்புக்குப் பங்கம ஏற்படாமல் இருக்க வேண்டும. அமைதி, சமாதானம ஏற்பட வேண்டும. மாமூல் நிலைமை திருமப வேண்டும. அப்போதுதான் அவசரகாலச் சட்டம தேவைப்படாது. அப்படியான நிலைமை ஏற்படுத்த எல்லோரும அரசுடன் ஒத்துழைக்க வேண்டும.

---

...யும் கிழக்கில் நிலைமையை குறிப்பாக பிரதேச நிர்வாக அமைப்பு, இனவிகிதாசாரம, அரசாங்கக் குடியேற்றத் திட்டங்கள், தொழில் வாய்ப்புகள் முதலானவற்றையும திரு மாத்தயா புள்ளிவிவரங்களுடன் விளக்கமாக எடுத்துக் கூறினார்.

### காசி ஆனந்தன்

திரு காசி ஆனந்தன் பேசுகையில் கூறியதாவது —

எங்களுடைய தலைவர் திரு பிரபாகரனைப் பற்றி தமிழ் நாட்டு அறிஞர் திரு கீ ஆ பெ விஸ்வநாதன் கூறுகையில் "2000 ஆண்டுகளுக்குப் பிறகு ஒரு ராஜராஜன் பிறந்திருக்கிறார்" என்றார்.

ஒரு பிரபல ஆங்கில கவிஞன் திரு பிரபாகரனைப் பற்றி குறிப்பிடும போது "பிரபாகரன் புயலின் ஒரு மையப்புள்ளி" என்றார்.

பீ பீ ஓ பிரபாகரனை "நெல்

---

## பி. பி. தேவராஜ் வடபகுதிக்கு செல்வார்

கொழுமபு ஏப் 19

இந்து சமய இந்து கலாசார ராஜாங்க அமைச்சர் திரு பி பி தேவராஜ் 5 நாள் விஜயம ஒன்றை மேற்கொண்டு விரைவில் வடபகுதிக்கு செல்ல இருக்கிறார்.

கடந்த காலங்களில் வடபகுதியில் இடமபெற்ற அசமபாவிதங்களினால் சேதமடைந்த கோயில்களையும அமைச்சர் பார்வையிடுவார்.

இங்கு அமைச்சருக்கு பலத்த வரவேற்பு அளிக்கப்படும.

யாழ் பல்கலைக்கழகம செல்லும அமைச்சர் அங்கு கல்விமான்களையும மற்றும கலைஞர்களையும சந்தித்து உரையாடுவார்

(இ—கூ)

---

ராஜீவ் காந்தியின் அமைச்சரவையில் இருந்த திரு சிதமபரம "இலங்கை அகதிளை இந்தியாவில் விடக் கூடாது என்றும அவர்களை திருப்பி அனுப்ப வேண்டும என்றும கூறியதை "தினபதி" மார்ச் 5ஆம திகதி இதழில் நான் படித்தேன்.

ஒரிஸாவிலுள்ள ஆதிவாசிகளுடன் இணைந்து இந்திரா காங்கிரஸ் கட்சியினர் இலங்கை அகதிகளை திருப்பி அனுப்ப வேண்டும என்று ஆர்ப்பாட்டம நடத்தியுள்ளனர்.

அந்நிய சக்திகளை நமபினால் என்ன நடக்கும என்பதை உலகும அறியட்டும.

இப்படி திரு காசி ஆனந்தன் கூறினார்.

### ரூபன்

திருகோணமலை மாவட்ட அரசியல் பொறுப்பாளர் திரு ரூபன் பேசுகையில் கூறியதாவது—

1915 ஆம ஆண்டில் தமிழ் முஸ்லிம கலவரம தோன்றியது. 1956 ஆம ஆண்டு தனிச் சிங்கள சட்டம கொண்டு வரப்பட்டது. 1958 ஆம ஆண்டில் தமிழ், சிங்கள இனக்கலவரம மூண்டது. அப்போதெல்லாம நாம ஆயுதங்களை நமபவில்லை.

நாம 1972 ஆம ஆண்டில்தான் ஆயுதப் போராட்டத்தை ஆரமபித்தோம. ஆயுதம மூலமே எமது பிரச்சினை தீர்க்கப்படலாம என்று நாம நமபினோம. 1983 ஆம ஆண்டில் தான் எமது போராட்டம வெகுஜன போராட்டமாக மாறியது. நாங்கள் அளப்பரிய தியாகங்களை செய்தள்ளோம.

ராஜீவ் காந்தியின் பிழையான அணுகு முறையினால் தான் மோதல் உண்டானது. தற்போதைய இந்திய பிரதமர் திரு வி பி சிங் அந்த பிழையை விடவில்லை. வாக்குறுதி அளித்தபடி தனது படையை எமது பகுதியிலிருந்து வாபஸ் பெற்றுக் கொண்டார்.

மாகாண அரசு உருவாகி

---

## முஸ்லிம் பரீட்சார்த்திகள் கோரிக்கை

மடவளை, ஏப். 18

பேராதனை பல்கலைக் கழக வெளிவாரிப் பட்டப் பரீட்சைகள் எதிர்வரும நோன்புப் பெருநாள் தினத்தன்றும நடைபெறவுள்ளன. இதனால் முஸ்லிம பரீட்சார்த்திகள் பாதிக்கப்படுவர்.

இது விடயமாக நேரசூசியில் மாற்றம கொண்டு வரப்பட வேண்டுமென முஸ்லிம பரீட்சார்த்திகள் கோரிக்கை விடுத்

---

...யின் ஸ்தாபகர்களான இந்த ஆறு தலைவர்களுக்கும ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி திட்ட வதிவிடப் பிரதிநிதி திரு ரொபர்ட் இங்ஸன்ட் கௌரவப் பட்டி அணிவித்து கௌரவித்தார்.

பேரவை தலைமையகத்தில் நடைபெற்ற இந்த வைபவத்தில் பேரவையின் ஸ்தாபக செயலாள



ரும முன்னாள் தலைவருமான அல்ஹாஜ் எம லாபிர் காசிமுக்கு திரு இங்ஸன்ட் கௌரவப் பட்டியை அணிவிப்பதையும தேசியத் தலைவர் ஜனாப் ஹலீம ஏ அசீஸ் அருகில் நிற்பதையும காணலாம (ஐ-007)

---

மாதாந்தம ஒரு தொகைப் பணமும வழங்கப்படும.

பாடசாலைகளில் ஒன்பதாம் ஆண்டில் கல்வி பயிலும மாணவ, மாணவிகளிலிருந்து இவர்கள் சேர்ந்தெடுக்கப்பட உள்ளனர்.

(ஐ-225)

## ஈரான் காரிகள் புத்தளம் வருகை

புத்தளம, ஏப். 18

நாளை சனிக்கிழமை 21ஆம திகதி புத்தளம நகருக்கு ஈரான் காரிகள் வருகை தரவுள்ளனர்.

நான்கு காரிகள் புத்தளம நகருக்கு விஜயம செய்து இங்குள்ள முக்கிய பள்ளிவாசல்களில் திருக்குர்ஆனை அழகிய முறையில் ஓதிக் காட்டுவார்கள்.

புத்தளம தொகுதியிலுள்ள பல பள்ளிவாசல்களிலும இவர்களின் குர்ஆன் ஓதல் வைபவம நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதாக சர்வதேச பர்தா இயக்கத்தின் புத்தளம கிளைத் தலைவர் டாக்டர் ஐ எம இல்யாஸ் "தினபதி"க்குத் தெரிவித்தார்.

(ஐ-241)

## இலவசமாக பேரீச்சம்பழம்

புத்தளம, ஏப் 18

ஈரான் இஸ்லாமியக் குடியரசினால் அன்பளிப்புச் செய்யப்பட்ட ஐந்து தொன் பேரீச்சம பழங்கள் புத்தளம மக்களுக்கு இலவசமாக விநியோகம செய்யப்பட்டன.

புத்தளம தேர்தல் தொகுதியிலுள்ள சகல பள்ளிவாசல்களுக்கும அவை கொடுக்கப்பட்டன.

புத்தளம நகரிலுள்ள அனைத்து வீடுகளுக்கும தலா ஐநூறு கிராம வீதம இப்பழங்கள் பகிர்ந்தளிக்கப்பட்டன.

(ஐ-241)

---

## புனித ரமழான் சிந்தனைகள்

இன்று புனிதமிகு ரமழானின் இறுதிப் பத்து கடைசி வெள்ளிக்கிழமையை நாம சந்தித்து இருக்கிறோம.

இன்று இலங்கை முஸ்லிமகளுக்கு ஏன்?, உலக முஸ்லிமகளுக்கே ஒரு மகிழ்ச்சி தரும நாள்.

முழு முஸ்லிம சமுதாயத்தின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியில் நிறுவப்பட்ட இஸ்ரவேல் நலன்காப்புப் பிரிவுக்கு இந்த ரமழானில் அதுவும "குத்ஸ்" தினமான இந்த நந்நாளில் மூடுவிழா நடைபெற இருப்பதே முஸ்லிமகளின் மகிழ்ச்சியைப் பெருக்கும பெரு நிகழ்வாகும்.

நம நாட்டிலே இஸ்ரேலிய மொசாட்டுக்கள் வந்தார்கள். அவர்கள் பரப்பிய "பசாதுக"ளோ ஏராளம், ஏராளம.

இன வெறியை, இனக் கலவரங்களை இந்த இஸ்ரவேலிய நயவஞ்சகர்கள் மூட்டி விட்டார்கள்.

விளைவுகளை நாம பல வடிவங்களில் சந்தித்தோம, அனுபவித்தோம.

அல்ஹமதுலில்லாஹ் அல்லாஹ் நமக்கு ரஹ்மத் புரிந்து விட்டான்.

புனித ரமழானில் அல்லாஹ் நமக்குத் தந்த மிகப் பெரிய நிஃமத் இந்த இஸ்ரவேல் நலன் காப்புப் பிரிவின் மூடுவிழாவாகும.

இப்படியான ஓர் உதிப்பை - ஞானத்தை - நமது ஜனாதிபதிக்கு ஊட்டிய அல்லாஹுத்தஆலாவே அனைத்துக்கும போதுமானவன்.

இன்று "குத்ஸ்" தினத்தையும அனுஷ்டிக்கும நாம புனித பைத்துல் முகத்தஸ் மீட்புக்காகவும பிரார்த்திக்க வேண்டும.

உலக முஸ்லிமகளின் மூன்றாவது புனித தலம பைத்துல் முகத்தஸில் அமைந்துள்ள அல் அக்ஸா மஸ்ஜிதாகும.

இதனையே நபி (ஸல்) அவர்களும பதினான்கரை ஆண்டுகளாக "கிப்லா"வாக முன்னோக்கித் தொழுதார்கள். புனித மிஃறாஜ் யாத்திரையும இங்கிருந்தே ஆரமபித்தது.

இப்படி முக்கியத்துவம பெற்ற இந்த புனித தலம யூதக் கொடுங்கோலர்களின் — ஸியோனிஸ்டுகளின் — கைகளில் சிக்கிச் சீர்குலைந்து வருவது எமக்குக் கவலையைப் பெருக்குகிறது.

எனவே —

இந்த நன்நாளில் நாம புனித பைத்துல் முகத்திஸ் மீட்புக்காகப் பிரார்த்திப்போம.

இஸ்லாத்தினால் மாத்திரம தான் இதனை மீட்க முடியுமென்பதை உணர்வோம.

அல்லாஹ் ரஹமத் செய்வானாக!

ஆமீன்! ஆமீன்!! யாரப்பல் ஆலமீன்.

எப் எம பைரூஸ்

# இடைக்கால அரசுக்கு 11 அமைச்சர்கள் தெரிவு

காத்மண்டு ஏப் 19

நேபாளத்தில் இடைக்கால அரசாங்கமொன்றை அமைப்பதற்காக 11 பேர் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்- பிரதமர் கிருஷ்ண பிரசாத் பட்டாராய் தலைமையில் 11 பேரின் விபரங்களை நேபாள மன்னர் வீரேந்திரா செவ்வாயன்று அறிவித்தார்-

கல்வி, கலாசார அமைச்சராக டாக்டர் கேஷார் ஜீங ரய்மாஜ் தெரிவாகியுள்ளார்- நேபாள கமயூனிஸ்ட் கட்சியின் மாஸ்கோ ஆதரவுப் பிரிவுத் தலைவராக இவர் நீண்ட காலம இருந்து வந்துள்ளார்-

நேபாளம காங்கிரஸின் நீண்டகால உறுப்பினரான அச்புத்ராஜ் ரெஜ்மியும அமைச்சரவையில இடமபெற்றுள்ளார்-

இடைக்கால அரசாங்கத்தில் நேபாள பிரதமராக இருந்த லோகேந்ர பகதூர் சான்ட் அமைச்சராகத் தெரிவாகியுள்ளார்-

வீடமைப்பு திட்டமிடல் அமைச்சர் பதவி ரெஜ்மிக்கு கிடைத்திருக்கிறது-

1988 ஆம ஆண்டில் நேபாளத்தில் பூமி அதிர்ச்சியினால் ஏற்பட்ட அழிவுகளின் போது இவர் முக்கிய பங்கினையாற்றினார்-

நேபாளம காங்கிரஸ் உறுப்பினர்கள் நான்கு பேர் இதில் தெரிவாகியிருக்கின்றனர்- மூன்று பேர் ஐக்கிய இடதுசாரி முன்னணியைச் சேர்ந்தவர்களாவர் மன்னர் வீரேந்திரா இருவரைத் தெரிவு செய்திருக்கிறார்- (எ)

## சீதன சண்டை: ஒருவர் பலி

டாக்கா, ஏப். 19

சீதனத் தகராறு முற்றியதால் ஒருவர் உயிரிழந்ததோடு பத்து பேர் காயமடைந்தனர்.

இச்சமபவம வங்காள தேசத்தில் கோபால்காஞ் மாவட்ட கிராமமொன்றில் இடம பெற்றது-

திருமண வைபவத்தின் போதே சீதனம தொடர்பான சச்சரவு ஏற்பட்டு பின்னர் துப்பாக்கிச் சூட்டில் முடிவடைந்தது.

1983 முதல் வங்காளதேசத்தில் சீதனம வாங்குவது தடை செய்யப்பட்டிருக்கிறது- (எ)

## உலகச் செய்திகள்

# ஐ. நா. சபையில் நமீபியா அங்கீகரிப்பு

நியூயோர்க், ஏப். 19

ஐக்கிய நாடுகள் சபையில் நமீபியாவுக்கு அங்கீகாரம அளிக்கப்பட்டிருக்கிறது.

ஐ நா பாதுகாப்பு கவுன்ஸில் திங்களன்று இதுபற்றி அறிவித்தது.

தென் ஆபிரிக்காவின் ஆதிக்கத்திலிருந்து விடுபட்ட நமீபியா கடந்த மார்ச் 21 ஆம திகதி சுதந்திர பிரகடனம செய்து கொண்டது.

ஐ நா சபையில் 160 ஆவது அங்கத்துவ நாடாக இப்போது நமீபியா ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது- (எ)

## சமூக சேவை: நேபாள இராணி ஒதுங்க முடிவு

காத்மண்டு, ஏப்- 19

நேபாள இராணி ஐஸ்வர்யா சமூக சேவையிலிருந்து ஒதுங்குவதற்கு முடிவு செய்துள்ளார் இதற்கமைய சமூக சேவைகள் தேசிய கூட்டுறவுச் சங்கத்தின் தலைமைப் பதவி, மற்றும பசுபதி ஆலய திருப்பணிப் பொறுப்பு என்பவற்றிலிருந்து அவர் முற்றாக விலகி விடுவார்-

தமது ராஜினாமாவைப் பற்றி நேரடி சபைகளுக்கு இவர் முன்னதாகவே அறிவித்துள்ளார் பதவி விலகல் முறைப்படி பின்னர் நடக்கும- [எ-ரி]

— விளம்பரம் —

அருளாளனும், அன்புடையோனுமாகிய அல்லாஹ்வின் திருநாமத்தால்...

# பைத்துல் முகத்தஸை மீட்டெடுப்போம்!

ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமை "சர்வதேச குத்ஸ் தினம" எனப் பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது- முஸ்லிமகளின் மூன்றாவது புனிதத் தலமாகிய "மஸ்ஜிதுல் அக்ஸா" வினதும அதனை உள்ளடக்கியுள்ள "பைத்துல் முகத்தஸ்" இனதும முக்கியத்துவத்தையும அவற்றின் மீதான முஸ்லிமகளின் பொறுப்புக்களையும உணர்த்துவதே இதன் குறிக்கோளாகும- இக்குறிக்கோளை அடிப்படையாகக் கொண்டு உலகம முழுவதிலுமுள்ள முஸ்லிமகள் பலவிதமான நிகழ்ச்சிகளின் மூலம "சர்வதேச குத்ஸ் தின"த்தை அனுஷ்டிக்கின்றனர்- இந்நிலையில் பைத்துல் முகத்தஸ் பற்றிய விடயத்தில் எமது கருத்தை செலுத்த வேண்டியது அவசியமாகின்றது-


முஹம்மது ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களது மிஃராஜ் யாத்திரையின் முதற் கட்டமான "அல் இஸ்ரா" (நடுநிசிப் பிரயாணம) மக்காவிலுள்ள கஃபதுல்லாஹ்விலிருந்து பைத்துல் முகத்தஸிலுள்ள "மஸ்ஜிதுல் அக்ஸா" வரை இடமபெற்றது- மஸ்ஜிதுல் அக்ஸாவிலிருந்தே "மிஃறாஜ்" (விண்ணுலக யாத்திரை) ஆரமபமாவது- இதன் போது முன்னைய நபிமார்கள் அனைவரும, மலக்குகளும முஹம்மது நபி (ஸல்) அவர்களை இமாமாக முன்னிறுத்தி தொழுத இடமும மஸ்ஜிதுல் அக்ஸாவாகும- இதனைப் பற்றி அல்லாஹு சுப்ஹானஹுவதஆலா தனது திருமறையிலே,

ஆண்டு வரை பழமை மிக்கதாகும- இந்நகரத்தின் மீது பலரால், பல இனங்களால். பல்வேறு கால கட்டங்களில் படையெடுப்புகளும ஆக்கிரமிப்புகளும மேற்கொள்ளப்பட்டு அதன் அதிகாரமும ஆட்சியுரிமையும கைக்குக்கை மாறின- இஸ்லாத்தின் ஆரமப காலத்தில் பைத்துல் முகத்தஸ் பாரசீகரின் ஆதிக்கத்தின் கீழிருந்தது-

இரண்டாம கலீஃபா உமர் இப்னு கத்தாப் (றழி) அவர்களின் ஆட்சியின் போது முஸ்லிமகள் பாரசீகரைத் தோற்கடித்து பாரசீக சாமராஜ்யத்தை தம வசமாக்கினர்- அபூ உபைதா பின் ஜர்ராஹ் (றழி) அவர்களின் தலைமையின் கீழ் முஸ்லிம படைகள் பைத்துல் முகத்தஸைக் கைப்பற்றின- அந்நகரத்திலிருந்த கிறிஸ்தவ பாதிரிகள். நகரத்தின் பொறுப்பை கலீஃபாவே நேரில் வந்து கையேற்க வேண்டுமென விடுத்த வேண்டுகோளை ஏற்று கலீஃபா உமர் (றழி) பைத்துல் முகத்தஸ் வந்தார்கள்- கிறிஸ்தவ பாதிரிகள் நகரின் திறப்பை கலீஃபா உமர் (றழி) அவர்களிடம நேரடியாகக் கையளித்து பைத்துல் முகத்தஸின் ஆட்சிப் பொறுப்பை முஸ்லிமகளிடம ஒப்படைத்தனர்-

இஸ்லாமிய சாமராஜ்யம சிதைந்து சிதறுண்ட போது சந்தர்ப்பம பார்த்துக் கொண்டிருந்த கிறிஸ்தவர்கள் முஸ்லிமகளின் இத்தர்ப்பாக்கிய நிலையைப் பயன்படுத்தி கி. பி. 1099 இல்

கொல்லப்பட்டார்கள்- மஸ்ஜிதே உமர் பள்ளிவாசலில் முழங்கால் வரையும இரத்த வெள்ளமாயிருந்தது- மனாராக்களிலிருந்தும வீட்டுக் கூரைகளிலிருந்தும குதிக்க வேண்டுமென்று முஸ்லிமகளுக்கு உத்தரவிடப்பட்டது- பல முஸ்லிமகள் உயிருடன் எரிக்கப்பட்டார்கள்- பெண்களும குழந்தைகளும அழுதும புலனில்லாமற் போய் விட்டது- இவ்வாறாக ஏழு நாட்கள் வரை கொலைகள் நடந்து கொண்டிருந்தன- எழுபதினாயிரம்



டைந்த நிகழ்ச்சியை விபரிக்கும "லேன்பூல்" என்ற ஆங்கிலேயரின் பின்வரும கூற்று சிலுவை வீரர்களின் நடத்தைக்கு முற்றிலும மாற்றமாக சுல்தான் சலாஹுத்தீனின் இரக்க சிந்தையையும தயாள குணத்தையும கோடிட்டுக் காட்டுகின்றது-

"பரிசுத்த நகரைக் கிறிஸ்தவர்கள் கசாப்புக் கடையாக்கிய சமயத்திலே, "இரக்கவான்கள் ஆசீர்வதிக்கப்படுவார்கள்- ஏனென்றால் அவர்கள் இரக்கத்தைப்

தொழில் முதலான உபாயங்களின் மூலமாக சமூகத்தைச் சுரண்டுவதும நாட்டு மக்களிடையே வேற்றுமைகளையும பிரிவினைகளையும தோற்றுவித்து சமுதாயத்தை பலவீனமடையச் செய்வதும யூதர்களுக்குக் கைவந்த கலை- இத்தகைய நயவஞ்சகச் செயல்களின் மூலமே சமூகத்தின் ஆதிக்கத்தைப் பெற முயல்பவர்கள் யூதர்கள்- இவர்களின் சமூகத் துரோகச் செயல்களின் காரணமாக கி பி 12 ஆம நூற்றாண்

தலைவர்களின் பிரகடனங்கள்" (Protocols of Jew Leaders) என அழைக்கப்படுகின்றன-

சியோனிச யூதர்களின் வஞ்சக நோக்கங்களை செயல்படுத்தும திட்டத்தின் முதற் கட்டமாக ஐரோப்பாவிலும அமெரிக்காவிலும சிதறி வாழ்ந்த யூதர்கள் அமெரிக்கா, ரஷ்யா. பிரித்தானியா, பிரான்ஸ் ஆகிய வல்லரசு நாடுகளின் அனுசரணையுடன் இரண்டாம உலக மகா யுத்தம முடிவடைந்ததைத் தொடர்ந்து படிப் படியாக பலஸ்தீனத்தில் குடியேற்றப்பட்டனர்- அதுவரை அங்கு வாழ்ந்து வந்த கிறிஸ்தவர்களும யூதர்களும கூட. பெருமபான்மையாக வாழ்ந்த அரபு முஸ்லிமகளுடன் சமாதானத்துடனும மிக அந்நியோன்யமாகவும வாழ்ந்து வந்தனர்- புதிதாகக் குடி வந்த யூதர்களை வரவேற்று உபசரித்து வாழ இடம கொடுத்தார்கள் பலஸ்தீன முஸ்லிமகள்-

புதிதாகக் குடியேறிய சியோனிச யூதர்கள், பலஸ்தீனத்தில் பரமபரை பரமபரையாக வாழ்ந்து வந்த முஸ்லிமகள் மீது வன்முறையையும பயங்கரவாதத்தையும கட்டவிழ்த்து விட்டனர்- முஸ்லிமகளை இமசித்து பயமுறுத்த ஆரமபித்தனர்- முஸ்லிமகளின் உடைமைகளை அபகரித்தனர்- பெண்கள், குழந்தைகள், வயோதிபர் என்ற வித்தியாசமின்றி படுகொலைப் படலங்களையும கட்டவிழ்த்து விட்டனர்-

பிரதேசங்களின், குறிப்பாக பைத்துல் முகத்தஸின் இஸ்லாமிய பாரமபரிய சின்னங்களை நிர்மூலமாக்கும கைங்கரியத்தை சியோனிசவாதிகள் ஆரமபித்தனர்- மஸ்ஜிதுல் அக்ஸாவுக்கு தீவைத்து அப்புனித மஸ்ஜிதை சேதப்படுத்தினர் புதைபொருள் அகழ்வாராய்ச்சிகள் என்ற போர்வையில் அமமஸ்ஜிதின் அத்திவாரங்களுக் கண்மையில் பாரிய கிடங்குகளை தோண்டி அமமஸ்ஜிதைத் தகர்த்து விடுவதற்கு திட்டங்களை மேற்கொண்டுள்ளனர்- பலஸ்தீன முஸ்லிமகள் பெருநாட் தொழுகை நடாத்திக் கொண்டிருந்த போது அவர்கள் மீது துப்பாக்கிப் பிரயோகம செய்து மஸ்ஜிதுக்குள்ளேயே பலரைக் கொன்று குவித்தனர் சியோனிசவெறியர்கள்- இவ்வாறாக பல விதத்திலும அல் அக்ஸா மஸ்ஜிதின் புனிதத் தன்மைக்கும முகத்தஸுக்கும களங்கம ஏற்படுத்தியும மாசு கற்பித்தும வருகின்றனர்-

பலஸ்தீனர்கள் உலகில் உயிரோடிருந்தால் என்றாவது ஒரு நாள் தம தாய் நாட்டை மீட்டெடுப்பார்கள் என்ற பீதியினால் பலஸ்தீன அகதிகள் முகாமகளைக் கூட ஆவிரக்கமற்ற முறையில் தாக்கி அப்பாவி பலஸ்தீன முஸ்லிமகளைக் கொன்று குவிக்கின்றனர்- டயர் யாவின் முதல் அண்மையில் லெபனானின் சப்ரா, ஷதில்லா அகதி முகாமகள் வரை மேற்கொள்ளப்பட்டுள்ள இப்பாதகர்களின் கொலைப் படலங்

ஸாவாகும். இதனைப் பற்றி அல்லாஹ் சுப்ஹானஹுவதஆலா தனது திருமறையிலே,

"(அல்லாஹ்) மிகப் பரிசுத்த மானவன்: அவன் (முஹம்மத் (ஸல்) எனும்) தன் அடியாரை (கஃபாவாகிய) சிறப்புற்ற பள்ளியிலிருந்து (பைத்துல் முகத்தஸி லுள்ள) மஸ்ஜிதுல் அக்ஸாவிற்கு ஓரிரவில் அழைத்துச் சென்றான். நாம் அதனைச் சூழவுள்ளவை சிறப்படையுமாறு ஆசீர்வதித்துள்ளோம். நமமுடைய திருஷ்டாந்தங்களை அவருக்கு காண்பிப்பதற்காகவே..."

(சூரா பனீ இஸ்ராயீல் 17.1) எனக் குறிப்பிடுகின்றான்.

முஹம்மத் நபி (ஸல்) அவர்களும் சஹாபாக்களும் ஆரம்பத்தில் "மஸ்ஜிதுல் அக்ஸா" வையே கிப்லாவாக முன்னோக்கி தமது தொழுகைகளை நிறைவேற்றி வந்தார்கள்.

"முஸ்லிம்கள் புனித யாத்திரை மேற்கொள்ளக் கூடிய மஸ்ஜித்கள் மூன்றாகும். மக்காவிலுள்ள "மஸ்ஜிதுல் ஹராம்" மதீனாவிலுள்ள "மஸ்ஜிதுன் நபவி", பைத்துல் முகத்தஸிலுள்ள "மஸ்ஜிதுல் அக்ஸா" என்பனவே அவையாகும்" என்று கருத்துப்பட முஹம்மது நபி (ஸல்) அவர்கள் நவின்றுள்ளார்கள்.


மேலும் பைத்துல் முகத்தஸ் அநேக நபிமார்களும் அவ்லியாக்களும் வாழ்ந்த இடமாகும். சுலைமான் நபி (அலை) அவர்களுடைய சிம்மாசனம் இங்கேயே உள்ளது. தாவூத் நபி (அலை), ஹஸரத் மர்யம் (அலை) ஆகியோரின் மிஹ்ராப்களும் இங்கேயே உள்ளன.

பைத்துல் முகத்தஸின் (ஜெருஸலம்) வரலாறு கி மு 3000 ருந்த கிறிஸ்தவர்கள் முஸ்லிம்களின் இத்தூர்ப்பாக்கிய நிலையைப் பயன்படுத்தி கி பி 1099 இல் "சிலுவை யுத்தம்" என்ற பெயரில் பெரும் படையெடுப்பை மேற்கொண்டு பைத்துல் முகத்தஸை ஆக்கிரமித்துக் கொண்டனர். கிறிஸ்தவர்கள் அடைந்த வெற்றியைப் பற்றி பாப்பாண்டவருக்கு அனுப்பிய அறிக்கை ஒன்றில் காட்பிரீ. ரேமண்ட் என்ற கிறிஸ்தவத் தலைவர்கள்,

"நாங்கள் ஜெருஸலமை வென்ற பொழுது எங்கள் பகைவரை என்ன செய்தோமென்று அறிய நீங்கள் விரும்பினால் அக்ஸா மஜ்ஜிதில் நமமுடைய (முஸ்லிம்) பகைவரின் அசுத்த வெள்ளத்தில் நமது குதிரைகள் நடந்து போகும் பொழுது அந்த இரத்தம் குதிரைகளின் முழங்கால் வரையும் பெருகிக் கிடந்தது என்று அறிந்து கொள்ளுங்கள்" என்று எழுதினார்கள்.

இந்த யுத்தத்தைப் பற்றி கிறிஸ்தவ சரித்திராசிரியரான "மிஷாட்",

"வெற்றியடைந்த கிறிஸ்தவர்கள் இரக்கத்துடன் நடந்து கொள்வார்கள் என்று எதிர் பார்க்கப்பட்டது. ஆனால் இதற்கு மாறாகவே நடந்தது. முஸ்லிம் ஆண், பெண் அனைவரும் கொலை செய்யப்பட்டார்கள். முஸ்லிம் வீடுகளில் நுழைந்து அவர்களைக் கொன்றார்கள். முஸ்லிம்கள் தப்பியோட ஒரு வழியுமில்லை. அநேகர் கோட்டை மதில் மீதேறிக் குதித்தார்கள். கிறிஸ்தவரால் சித்திரவதையுண்டு இறப்பதை விட இவ்வாறு உயிரிழந்தனர் போலும்! மற்றவர்கள் பள்ளி வாசல்களில் ஓடியொளிந்து கொண்டார்கள். ஆனால் அவர்களெல்லாம் சிலுவை வீரரால்



## இன்று பைத்துல் முகத்தஸ் தினம்

இஸ்லாத்தின் இந்த புனித தலத்தை ஸியனிஸ வெறியர்களிடமிருந்து விடுவிக்க வேண்டிய அவசியத்தை உணர்த்தி, இன்றைய குத்பா பிரசங்கத்தை அமைத்துக் கொள்ளுமாறும், விஷேட பிரார்த்தனை நடத்துமாறும் பள்ளிவாயல் தர்ம கர்த்தாக்களையும், கதீப்மார்களையும் பணிவன்புடன் வேண்டிக் கொள்கிறோம்.

மிரம் முஸ்லிம்களுக்கு அதிகமாகவே கொல்லப்பட்டார்கள்." என்று குறிப்பிடுகின்றார்.

சிலுவை யுத்தங்களின் போது முஸ்லிம்கள் மீது கிறிஸ்தவர்கள் புரிந்த அட்டூழியங்களுக்கும் காட்டுமிராண்டித்தனமான அக்கிரமங்களுக்கும் கிறிஸ்தவர்களின் முற்கூறிய அறிக்கைகளே போதிய சான்றாகும்.

கி பி 1187 ஆம் ஆண்டு செப்டம்பர் 20 ஆம் திகதி சுல்தான் சலாஹுத்தீன் ஐயூபி முஸ்லிம்களை ஒன்று திரட்டி பைத்துல் முகத்தஸை விடுவித்து மீண்டும் முஸ்லிம்கள் வசமாக்கினார்.

பைத்துல் முகத்தஸ் சுல்தான் சலாஹுத்தீனின் தலைமையிலான முஸ்லிம் படைகளிடம் சரணடைந்த பொழுது ... பெறுவார்கள்" என்ற புண்ணிய வசனம் மறந்து போகப்பட்டதாயிற்று. இரக்கமற்றவர்கள் அதிர்ஷ்டமுள்ளவர்களாக இருந்தார்கள். ஏனென்றால் முஸ்லிம் சுல்தானிடமிருந்து அவர்கள் இரக்கத்தைப் பெற்றார்கள்... ஜெருஸலமை வென்ற ஒரு விஷயம் மட்டுமே சுல்தான் சலாஹுத்தீனைப் பற்றித் தெரிந்த விஷயமாயிருந்ததால் அவர் அக்காலத்திய அல்லது எல்லாக் காலத்திய மேலான இரக்க சித்தமுள்ளவரென்றும் பெருந்தன்மையுள்ளவரென்றும் நிரூபிப்பதற்கு போதிய சான்றாகும்."

காம வாழும நாட்டில் விபசாரம் போன்ற ஒழுக்கச் சீர்கேடுகளை பரப்புவதும் வட்டித் டில் இங்கிலாந்திலிருந்தும் 13 ஆம் நூற்றாண்டில் பிரான்சிலிருந்தும் 14 ஆம் நூற்றாண்டில் ஸ்பெய்னிலிருந்தும் இறுதியாக 1939 ஆம் ஆண்டளவில் இரண்டாவது உலக மகா யுத்தத்தின் போது ஜெர்மனியிலிருந்தும் துரத்தியடிக்கப்பட்டு கூட்டமிழந்து திரிந்தார்கள்.

1897 ஆம் ஆண்டு அமெரிக்காவின் லொஸ் ஏஞ்ஜல்ஸ் நகரில் ஹேர்ட்ஸல் எனும் சியோனிச யூதத் தலைவரின் தலைமையில் கூடிய சுமார் 360 யூதத் தலைவர்கள் "யூத இராச்சியம்" ஒன்றை நிறுவுவதற்கான வழி முறைகளை ஆராய்ந்தனர். அவர்கள் மேற்கொண்ட தீர்மானங்கள் மிக இரகசியமாக பாதுகாக்கப் பட்டு வந்தன. இவை "யூதத் ...

யும் கட்டவிழ்த்து விட்டனர். வாழ இடமின்றி நாடோடிகளாக அலைந்து திரிந்த யூதர்களுக்கு வாழ இடமளித்த அதே பலஸ்தீன முஸ்லிம்கள் அவர்களின் சொந்த பூமியிலிருந்தே விரட்டியடிக்கப்பட்டார்கள். துரத்தியடிக்கப்பட்ட பலஸ்தீன முஸ்லிம்கள் அண்டை முஸ்லிம் அரபு நாடுகளான எகிப்து, சிரியா, ஜோர்தான், லெபனான் போன்றவற்றில் அகதிகளாகக் குடியேறினர்.

இறுதியாக 1948 ஆம் ஆண்டு மூன்கூறப்பட்ட வல்லரசுகளின் துணையுடன் முஸ்லிம்களுக்குச் சொந்தமான பலஸ்தீனத்திலே "இஸ்ரவேல்" என்ற பெயரில் சியோனிச யூத நாடொன்று பிரகடனப்படுத்தப்பட்டது.

அதனைத் தொடர்ந்து மத்திய கிழக்கு குமுறும் எரிமலையாக மாறியது. அங்கு நிலவிய சமாதானமும் சாந்தியும் அகன்றன. "நைல் நதி முதல் யூப்ரட்டீஸ் நதி வரை யூத இராச்சியம்" என்ற யூதத் தலைவர்களின் இரகசியத் தீர்மானத்தை செயல்படுத்தும் திட்டங்களை இஸ்ரவேல் செயல்படுத்த ஆரம்பித்தது. இஸ்ரவேலை பலஸ்தீனிற்கும் வெளியே விஸ்தரிக்கும் வகையில் அண்டை முஸ்லிம் அரபு நாடுகளையும் கபளீகரம் செய்ய ஆரம்பித்தது. 1967 ஆம் ஆண்டில் மேற்கொண்ட பெரும் படையெடுப்பின் மூலம் எகிப்தின் காஸா, சினாய் பிரதேசங்களையும் ஜோர்தானின் மேற்குக் கரைப் பிரதேசத்தையும் சிரியாவின் கோலான் மலைப் பிரதேசத்தையும் ஆக்கிரமித்து இஸ்ரவேலும் இணைத்துக் கொண்டது.

தான் ஆக்கிரமித்துக் கொண்ட ... பாதகர்களின் கொலைப் படலங்களுக்கு அளவில்லை. பலஸ்தீன முஸ்லிம்கள் எங்கிருந்தாலும் ஒழித்துக் கட்டும் இவர்களுடைய அக்கிரமம் டுனீஸியாவிலுள்ள பலஸ்தீன விடுதலை இயக்கத் தலைமையகத்தைத் தாக்குவது வரை வியாபித்தது.

சியோனிசவாதிகள் இத்தோடு திருப்தியடைய மாட்டார்கள். "நைல்நதி முதல் யூப்ரட்டீஸ் நதி வரையிலான யூத இராச்சியம்" என்ற அவர்களது அடிப்படைத் திட்டத்திற்குள் மதீனாவும் கூட அடங்குகின்றன. இந்த சியோனிச யூதர்கள் இதுவரை புரிந்துள்ள ஈனச் செயல்கள் யாவும் இக் குறிக்கோளை நோக்கமாகக் கொண்டவையே.

உலக முஸ்லிம்களே! முஸ்லிம்களின் பூமிகள் அபகரிக்கப்பட்டு முஸ்லிம் சகோதர, சகோதரிகள் ஈவிரக்கமின்றி கொலை செய்யப்பட்டு எமது புனிதத் தலங்கள் மாசுபடுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன. இந்நிலையில் எமது பொறுப்பென்ன?

இஸ்லாத்தின் கொடியின் கீழ் ஓரணியில் திரண்டு, எம்மிடமிருந்து பலாத்காரமாக பறித்தெடுக்கப்பட்ட புனித மஸ்ஜிதுல் அக்ஸாவையும் அதனை உள்ளடக்கியுள்ள பைத்துல் முகத்தஸையும் அதனைக் கொண்டுள்ள பலஸ்தீன பூமியையும் பலப் பிரயோகம் மூலம் மீட்டெடுப்பதற்கு எமது எல்லா வளங்களையும் வல்லமைகளையும் ஒன்று திரட்டுவோமாக!

உலக முஸ்லிம்கள், சியோனிச இஸ்ரவேலை துடைத்தெறிந்த புனித பூமிகளைப் பாதுகாப்பதற்கு அல்லாஹ் தபாரக் வ தஆலா அருள் பாலிப்பானாக!

வெளியீடு : பைத்துல் முகத்தஸ் செயல் முன்னணி
இல- 147- சேர்ச் வீதி- கொழும்பு—02

# புனித பைத்துல் முகத்தஸை மீட்கப் பிரார்த்திப்போம்

உலக முஸ்லிமகளின் மூன்றாவது புனித தலம பைத்துல் முகத்திஸில் அமைந்துள்ள மஸ்ஜிதுல் அக்ஸாவாகும.

ரஸூல் (ஸல்) அவர்களால் 14½ வருடங்களாக கிப்லாவாக இது முன்னோக்கித் தொழப்பட்டது.

நபியவர்கள் தமது மகத்துவமிக்க மிஃறாஜ் என்னும விண்ணுலக யாத்திரையை இங்கிருந்தே ஆரமபித்தார்கள்.

பல நூற்றாண்டுகளாக முஸ்லிமகளால் பாராட்டிப் போற்றிப் பாதுகாக்கப்பட்ட மஸ்ஜிதுல் அக்ஸா இன்று யூதக் கொடுங்கோலர்களின், ஸியோனிச படுகொலையாளர்களின் கைகளில் சிக்கிச் சீர்குலைந்து வருகின்றது.

மஸ்ஜிதுல் அக்ஸாவை அழித்தொழித்துவிட்டு அவ்விடத்திலே யூத தேவாலயம ஒன்றை நிறுவுவதற்கு யூதர்கள் பலமாக முயற்சித்து வருகிறார்கள்.

கி பி 636இல் கலீபா உமர் பின் கத்தாப் (ரழி) அவர்கள் ஜெரூசலத்தை கைப்பற்றிய போது யூத தேவாலயம அமைந்திருந்த பகுதியிலேயே மஸ்ஜிதுல் அக்ஸா கட்டப்பட்டதாக யஹூதி நசாராக்களால் கூறப்படுகிறது.

ஆனால், உண்மையில் யூதர்களின் தொடர்ச்சியான சதி முயற்சிகளையும எதிர்ப்புக்களையும பொறுக்க முடியாத அன்றைய ரோமானியர்கள் யூதர்களை அடக்குவதற்காக மேற்கொண்ட நடவடிக்கைகளில் ஒன்றுதான், ரோமானிய தளபதி "டைட்டஸ்"ஸினால் கி பி 70 ஆம ஆண்டில் இந்த யூத தேவாலயம மண்ணோடு மண்ணாக்கப்பட்டதாகும.

1969ஆம ஆண்டில் மஸ்ஜிதுல் அக்ஸா தீயிட்டுக் கொளுத்தப்பட்டது.

ஆனால், இதற்குக் காரணமான அவுஸ்திரேலிய பண்ணை வளர்ப்பாளன் ஒருவன் பைத்தியம பிடித்த நிலையில் எந்தவித தூண்டுதலும இன்றி இதனை செய்ததாக கதைகட்டி விடப்பட்டு அவனுக்கு சிறியதொரு தண்டனை அளித்து யூத அரசு இதனை மூடி மறைத்து விட்டது.

கத்தால் பள்ளிவாசலின் மதில்களும சேதமாகின. இவனும எந்தவித தூண்டுதலும இன்றி பைத்தியம பிடித்த நிலையிலேயே இதனை செய்ததாக யூத அரசாங்கம கதையை ஜோடித்து அவனை சிறையில் அடைத்தது.

சில மாதங்களின் பின் பைத்தியம என்று கூறப்பட்ட அதே போர் வீரன் யூதர்களின் தெற்கு லெபனான் முற்றுகைக்கு இராணுவ சேவைக்கு சேர்த்துக் கொள்ளப்பட்டான்.

மூலம பண உதவி அளித்து வருவது குறிப்பிடத்தக்கது.

இந்த சதி முயற்சிகள் யாவும, கண நேரத்தையேனும நாம வீணாக்காது பைத்துல் முகத்தஸை மீட்பதற்குரிய முயற்சிகளை துரிதமாக மேற்கொள்ள வேண்டும என்பதையே குறிக்கின்றன.

அப்படியின்றேல் ஸியோனிச மத விரோதிகள் மஸ்ஜிதுல் அக்ஸாவை அழித்து விடுவதில்

**— எம். நௌஷாட் மொஹிடீன் —**

1983 மார்ச் 11ஆம திகதி "ரப்பி" இஸ்ரவேலைச் சேர்ந்த "ஆரியல்" என்பவனின் தலைமையில் 10 யூத தீவிரவாத இராணுவ வீரர்கள் உட்பட 45 யூதர்கள் பலாத்காரமாக மஸ்ஜிதுள் உட்புகுந்து அதனைக் கைப்பற்ற முனைந்தனர்.

காலையிலும, மாலையிலும இமமுயற்சி நடைபெற்றது. ஆனால், அவர்களின் முயற்சி பள்ளி பாதுகாப்பு அதிகாரிகளினால் தடுக்கப்பட்டு அவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள குன்றில் யூத குடியேற்றமொன்றை ஏற்படுத்துவதே அவர்களின் நோக்கமாக இருந்தது.

அதே நாள் காலையில் யூத வெறியர்களால் மஸ்ஜிதுல் அக்ஸாவில் ஸஜ்தா செய்வதற்கு ஒதுக்கப்பட்டிருந்த பகுதியில் மிகச் சக்தி வாய்ந்த குண்டொன்று புதைக்கப்பட்டிருந்தது.

அதனை அங்கு தொழுவதற்கு சென்றிருந்த சிலர் கண்டுபிடித்து பொலீஸ் மூலம அகற்றினர். அக்குண்டு அதிகமான முஸ்லிமகள் ஒன்றுசேர்ந்து தொழுகின்ற ஒரு நேரத்தில் வெடிப்பதற்கு ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது.

அக்குண்டு மாத்திரம குறித்த நேரத்தில் வெடித்திருந்தால் பள்ளியும பலமாக சேதமாகி யிருப்பதுடன் பல ஆயிரம முஸ்லிமகள் கொல்லப்பட்டிருப்பார்கள்.

இவ்வகை சதி முயற்சி அனைத்தும தோல்வியடையவே,

மிக விரைவில் வெற்றி கண்டு விடுவார்கள்.

சட்ட விரோதமான யூத நாட்டை ஏற்படுத்தியதிலிருந்து யூதத் தலைவர்கள் தமது நீண்ட நாள் கனவான "யூத சாமராஜ்யமொன்றை" நிறுவுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டு வருகிறார்கள்.

ஆகவே, பைத்துல் முகத்தஸை மீட்டு யூத ஆட்சியாளர்களை எமது புனித ஸ்தலத்திலிருந்து விரட்டியடிப்பது உலக முஸ்லிமகள் ஒவ்வொருவரினதும மார்க்கக் கடமையாக இருக்கின்றது.

இந்த புனித ரமழான் மாதத்திலே "குத்ஸ் தினத்தை" அனுஷ்டிப்பதன் மூலம அந்த தெய்வீக கடமையை நிறைவேற்றுவதற்காக எமது சக்திகள் அனைத்தையும ஒன்று திரட்டுவதுடன் எமமை நாம அர்ப்பணிப்பதற்கும தயாராக வேண்டும.

இஸ்லாத்தின் மகிமையைக் காக்க எமமால் முடிந்த அனைத்தையும செய்வதற்கு நாம முன்னின்று உழைப்போமாக!

இந்த மார்க்கக் கடமையை ஒவ்வொரு முஸ்லிம நாடும மட்டுமன்றி தனிப்பட்ட ஒவ்வொரு முஸ்லிமும உணர்ந்து கொள்ள வேண்டும.

இதற்காகவே சில வருடங்களுக்கு முன்பு ஈரான் இஸ்லாமியக் குடியரசின் ஸ்தாபகரான காலஞ்சென்ற இமாம கொமேனி அவர்களால் புனித ரமழான் மாதத்தின் கடைசி வெள்ளிக்கிழமையை "பைத்துல் முகத்தஸ் தினம" அல்லது "குத்ஸ் தினம" எனப் பிரகடனப்படுத்தப்பட்டது.

ஆரமபத்தில் இந்தப் பிரகடனத்தை வழமையான ஈரானின்

தீவிரவாதச் செயல்களில் ஒன்றாகத்தான் அரபு உலகம கருதியது.

ஆனால் உண்மைகளின் தத்துவம காலம கடந்துதான் உணரப்பட்டு வந்துள்ளது என்பது உலக வரலாறு.

இதே நிலைதான் "குத்ஸ் தின" விவகாரத்திலும.

இந்தப் பிரகடனத்தை அடுத்து பலஸ்தீனப் போராட்டத்தில் ஏற்பட்ட புதிய உத்வேகம விரும்பியோ விரும்பாமலோ இந்தத் தினத்தை ஏற்றுக் கொள்ள வேண்டிய ஒரு நிர்ப்பந்தத்தை அரபு நாடுகள் மத்தியில் தோற்றுவித்துள்ளது.

இதன் காரணமாக இந்த தினம இன்று பெருமபாலான உலக முஸ்லிம நாடுகளில் அனுஷ்டிக்கப்பட்டு வருவது பலஸ்தீன மக்களின் சுதந்திரம் அல்லது யூதர்களின் ஆக்கிரமிப்புக் கொள்கையின் வீழ்ச்சி வெகு தூரத்தில் இல்லை என்ற நமபிக்கையை உலக முஸ்லிமகள் மத்தியில் ஏற்படுத்தியிருக்கின்றது.

இன்றைய தினம இலங்கை முஸ்லிமகளின் வரலாற்றிலும பொன் எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய ஒரு தினமாகும.

ஜனாதிபதி திரு பிரேமதாஸ தனது தேர்தல் வாக்குறுதிகளுள் ஒன்றான இஸ்ரவேல் நலன் பேணும பிரிவை மூடி விடுவதற்கு விதித்துள்ள காலக்கெடு இன்றைய தினம என்பதை நாம மறந்துவிடக் கூடாது.

இதற்கு மேலும சிகரம வைத்தாற் போல் புனித ரமழானின் கடைசி வெள்ளிக்கிழமையான இன்றைய தினத்தில் அதாவது "பைத்துல் முகத்தஸ் தினத்தில்" இலங்கை முஸ்லிமகளின் ஏகோபித்த எதிர்ப்புக்கு மத்தியில் நிறுவப்பட்ட இஸ்ரவேல் நலன் பேணும பிரிவின் மூடுவிழா நடத்தப்படுவது முஸ்லிமகளுக்கு இரட்டிப்பு மகிழ்ச்சியளிக்கும ஒரு சமபவமாகும.

அது மட்டுமன்றி பலஸ்தீன சுதந்திரத்திற்காகவும, சுய கௌரவத்திற்காகவும உயிர்த் தியாகம செய்து வரும எமது சகோதரர்களுக்கும இது மேலும தெமபூட்டுவதாகவே அமைந்துள்ளது.

எல்லாம வல்ல அல்லாஹ் இஸ்லாமிய உணர்வுடன் நாம வாழ வழிகாட்டுவானாக. ஆமீன்.

## முன்மாதிரியான அணுகுமுறை

தென்னகத்தில் கீழ்க்கரை என்ற ஊரில் நடந்த உண்மைச் சமபவம இது!

அல்லாமா அஹ்மது அப்துல் காதிர் (ரஹ்) அவர்கள் கீழ்க்கரையில் வாழ்ந்து மறைந்த இறைநேசச் செலவர்களில் ஒருவர்.

அறிவுலக மேதை இமாமுல் அரூஸ் மாப்பிள்ளை ஆலிம (ரழி) அவர்களின் பேரரான இவர் சன்மார்க்க நடைமுறைகளுக்கு எதிராகச் செயற்படுவோரை எளிய இனிய குணத்தால திருத்தி நல்வழிப்படுத்துவதில் திறமைசாலி!

சுமார் 50 ஆண்டுகளுக்கு முன்பு ஒரு ரமழான் நோன்புப் பருவம.

ஓரளவு செல்வாக்கு உள்ள ஒரு பணக்காரர் பட்டப்பகலில் நோன்புக் காலத்தில் தேநீர்க் கடை வைத்து நடத்தி வந்தார்—

இதனைக் கேள்வியுற்ற அல்லாமா அவர்கள் தமது மாணாக்கர்களுள் ஒருவரிடம ஒரு கதிரையைக் கொடுத்து அதனைக் குறிப்பிட்ட அந்த சிற்றுண்டிச்சாலையின் முன்பு ஓதுக்குப்புறமாகப் போடச் சொன்னார்கள்—

புனித அல்குர்ஆன் கிதாபு ஒன்றைக் கையிலெடுத்துக் கொண்டு அந்த இடத்திற்குச் சென்ற அன்னார் அக்கதிரையில் அமர்ந்த குர்ஆனை ஓத ஆரமபித்தார்—

இவர் குர்ஆன் ஓதிக் கொண்டிருப்பதைக் கண்ணுற்றதால் எந்த ஒரு நபரும அப் பக்கம தலை காட்டவில்லை கடை உரிமையாளருக்கோ ஏமாற்றம தாங்க முடியவில்லை—

வியாபாரம எதுவும நடைபெறாததால் பின புக்காகத் தாழிட்டுக் கடையை மூடிவிட்டு அவர் வெளியேறினார்—

அதுவரை அங்கு அருள்மறையைப் பாராயணம செய்து கொண்டிருந்த மாணவர்கள் தம இல்லம சென்றார்கள்—

தம்மிடம மார்க்கக் கலை பயிலும மாணவர் மூலம அந்தத் தேநீர்க்கடைக்காரருக்கு ஒருசில பண நோட்டுக்களும கடிதம ஒன்றும அனுப்பி வைத்தார்கள்—

அன்பரே! இன்று பகல் முழுவதும உமது தேநீர்க் கடையின் முன்னால் அமர்ந்து நான் திருமறையை ஓதிக் கொண்டிருந்ததால் நான் பார்த்து விடுவேனோ என எண்ணி எவருமே உமது கடைக்கு வரவில்லை அதனால் உமக்கு நேர்ந்த நஷ்டத்திற்கு ஈடாக இத்துடன் பணத்தைப் பெற்றுக் கொள்வீராக!

மேலும புனித ரமழானுக்குக் கண்ணியம கொடுக்குமாறும உமமை வேண்டிக் கொள்கிறேன் என்றவாறு அக்கடிதத்தில் எழுதப்பட்டிருந்தது—

அதற்குப் பின்பு ரமழான் காலத்தால் பகல் நேரங்களில் எப்போதாயினும அக்கடை திறக்கப்படவில்லை—

ரமழான் இரவு காலத்தில் அக்கடை உரிமையாளர் கடையைத் திறந்து நன்கு பொருளீட்டினார்—

சன்மார்க்க விரோதமான விஷயங்களில் தான்தோன்றித் தனமாகச் செயற்படுவோரைத்

தினபதி
இஸ்லாமிய
பூரிவசனா
— தயாரிப்பு: எப். எம். பைரூஸ் —

## புனித திருக்குர்ஆனின் நவீன

அத்துடன் தஜ்வீத் குறியிட்டப் பட்ட குர்ஆனில் ஓதப் பழகாமல்

தண்டனை அளித்து யூத அரசு இதனை மூடி மறைத்து விட்டது.

1982ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் இஸ்ரவேலிய போர் வீரனான "அலன் குட்மேன்" என்பவன் மூர்க்கத்தனமாக மஸ்ஜிதுல் அக்ஸாவினுள் புகுந்து அங்கு தொழுது கொண்டிருந்தவர்களை வெறிபிடித்த நிலையில் துப்பாக்கிப் பிரயோகம் செய்தான்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தினால் மூவர் கொல்லப்பட்டதுடன் சுமார் நூறு முஸ்லிம்கள் படுகாயத்திற்குள்ளானார்கள்.

இந்தத் துப்பாக்கிப் பிரயோ

இவ்வகை சதி முயற்சி அனைத்தும் தோல்வியடையவே, கடைசியாக "புதைபொருள் ஆராய்ச்சி" என்ற பெயரில் மஸ்ஜிதுல் அக்ஸா அமைந்துள்ள பகுதி முழுவதையும் தோண்டி, குன்றையும் குழிகளையும் ஏற்படுத்துகின்ற சதி முயற்சி ஒன்றை தற்போது ஸியோனிஸ்டுகள் மேற்கொண்டு வருகிறார்கள்.

மஸ்ஜிதுல் அக்ஸாவை அழித்து விட வேண்டும் என்ற தீவிரவாத போக்குடைய "காச் ரப்பிஸ்" என்பவர்களின் பதினேழு வருட இயக்கத்துடன் அமெரிக்க யூத வியாபாரிகள் சேர்ந்து "தேவாலய நிதி" ஒன்றை நிறுவி அதன்

# மஜ்லிஸ்

ஹிஜ்ரி 1410 ரமழான் பிறை 23

## மகிழ்ச்சித் திருநாள்

இன்று ரமழானின் இறுதி வெள்ளிக்கிழமையாகும்.

இன்றைய நாள் இரு வகையில் இலங்கை முஸ்லிம்களுக்கும் உலகெங்கும் உள்ள முஸ்லிம்களுக்கும் முக்கியத்துவம் வாய்ந்தது.

இலங்கையிலுள்ள இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவு ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் பணிப்பின் பேரில் இன்று மூடப்பட இருக்கிறது.

சர்வதேச "குத்ஸ்" தினமும் இன்றே உலக முஸ்லிம்களால் அனுஷ்டிக்கப்படுகிறது.

பல நூற்றாண்டுகளாக முஸ்லிம்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த மஸ்ஜிதுல் அக்ஸா இன்று யூதர்களின் சியோனிஸ்டுகளின் கைகளில் சிக்கிச் சீரழிந்து வருகின்றது.

இன்று குத்ஸ் தினத்தை நினைவு கூரும் நாம், பைத்துல் முகத்தஸை மீட்க பிரார்த்திக்க வேண்டும்.

முஸ்லிம் சமய, கலாசார விவகார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் கூறி இருப்பதைப் போன்று நாம் இத்தினத்தில் அல் அக்ஸா மீட்புக்காகப் பிரார்த்திப்போம்.

இஸ்ரவேல் நலன் காக்கும் பிரிவை மூடும் ஜனாதிபதியையும் பாராட்டுவோம்.

# நவீன குறிவரலாறு

புனித திருக்குர்ஆனை அல்லாஹுத்த ஆலா வானவர் ஜிப்ரீல் (அலை) அவர்கள் மூலமாக இறுதித் தூதர் முஹம்மது (ஸல்) அவர்களுக்கு வாய்மொழி மூலம் நேரத்திற்கு காலத்திற்குக் காலம் தேவைகளுக்கொப்ப அருளினார்கள்.

தற்போது நமக்குக் காட்சியளிக்கும் குர்ஆன் பிரதிகளைப் போன்று அல்லாஹ்விடமிருந்து குர்ஆன் பிரதிகளாக இறக்கப்படவில்லை என்பது உண்மை!

திருக்குர்ஆன் வசனங்கள் இறக்கி வைக்கப்படும் பொழுது நபி (ஸல்) அவர்கள் இவ்வசனங்களை மனதில் பதிய வைத்து மனனஞ் செய்து கொள்வதுடன் ஸஹாபாப் பெருமக்களுக்கு அந்த அத்தியாயங்களை மனனஞ் செய்து கொடுப்பதுடன் அதனைப் பதிவு செய்து கொள்ளும்படியும் வஹி எழுத்தாளர்களுக்கு ஏவி வந்தார்கள்.

முஆவியா ஆட்சிக் காலத்தில் பல பிரச்சினைகள் தலை தூக்கி குர்ஆனை தவறாக ஓத ஆரம்பித்தனர்.

ஸியாத் எனும் பஸறா தேசத்து அரசன் அக்கால பிரபல்யம் பெற்ற அபுல் அஸ்வதுத்த அலி எனும் ஆலிமிடம் குர்ஆனுக்கு ஹரகத் அதாவது ஸவர் ஸேர் பேஷ் போன்ற உயிர்க் குறிகளை வைக்கும்படி கேட்டு நபியவர்களும் ஸஹாபா பெருமக்களும் செய்யாத இவ்வேலையை தாம் செய்ய முடியாது என மறுப்புத் தெரிவித்தார்.

அல்லாஹ்வின் மீது சத்தியம் இப்பணியில் நிச்சயம் நன்மையேதான் இருக்கிறது என்பதை அறிந்த ஆளுநர் ஸியாத் ஒரு பாமர மனிதனை அழைத்து "அன்னல்லாஹ் பரீஉம் மினல் முஷ்ரிகீன வரஸூலுஹு" என்று ஓதாமல் "அன்னல்லாஹ் பரீஉம் மினல் முஷ்ரிகீன வரஸூலிஹி" என்று அபுல் அஸ்வத் எனும் பெரியார் நடந்து செல்லும் போது தவறாக ஓதும்படி ஆயத்தை சொல்லிக் கொடுத்தார்.

அதன் பொருள் அல்லாஹ் தன் ரஸூல் முஷ்ரிகீன்களை விட்டும் வேறுபட்டவன் என்பதாகும்.

அவ் அத்தியாயத்தின் சரியான பொருளாவது அல்லாஹ்வும் ரஸூலும் முஷ்ரிகீன்களை விட்டு வேறுபட்டவர்கள் என்பதாகும்.

அக்காலத்தில் ஸவர் ஸேர் பேஷ் இல்லாததால் வரஸூலுஹு என்பதற்குப் பதிலாக வரஸூலிஹி எனத் தவறாக ஓதுவதைச் செவிமடுத்த அப்பெரியார் ஆளுநரின் வேண்டுகோளை ஏற்று ஹரகத் (பத்ஹு கஸ்று ழம்மு) போன்ற உயிர் குறிகளை வைக்க ஆரம்பித்தார்.

தஜ்வீத் சட்ட முறைகளைப் பேணி தர்தீலாக குர்ஆனை ஓதும்படி அல்லாஹ் கட்டளையிட்டிருக்கிறான்.

(முஸ்லிம் 4) தஜ்வீத் சட்ட முறைகளைப் பேணி குர்ஆனை ஓதாதவருக்கு அல்குர்ஆனே சபிக்கிறது என்பது நபிமொழியாகும்.

தஜ்வீத் கலையைக் கற்பது அவசியம்.

தஜ்வீத் முறையின்றி குர்ஆனை ஓதுபவர் பாவி என்பது முஹம்மதிப்னுல் ஜஸரி எனும் பெரியாரின் சொல்லாகும்.

எனவே இக்கூற்றின்படி தஜ்வீத் முறையின்றி குர்ஆனை ஓதுவது தவறாகும்.

இன்று தஜ்வீத் சட்டங்களின் ஒரு சிறு பகுதியான எழுத்து உச்சரிப்பை மாத்திரம் அறிந்து குர்ஆனை ஓதுவதை சரியெனக் கருதுவது முறையாகாது.

— மௌலவி எஸ். எம். ஆரிப் —

வெளியாக்குதல் மறைத்தல் பிரட்டல் நுழைத்தல் போன்ற தஜ்வீத் சட்டங்களுடன் ஓதுவதே குர்ஆன் ஓதுவதற்குள்ள முறையாகும்.

இந்த தஜ்வீத் சட்டங்களை குர்ஆனில் உயிர் குறிகள் மூலம் காட்டித் தரக் கூடிய குறிமுறை ஒன்றை இமாம் தனவி எனும் பெரியார் அறிமுகப்படுத்தியுள்ளார் என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இந்த நவீன தஜ்வீத் குறிமுறையில் குர்ஆன் பிரதிகளில் ஓத முடியாது கஷ்டப்படுகிறார்கள்.

தஜ்வீத் சட்ட முறைப்படி இலேசாக அழகான முறையில் ஓதக் கூடிய தஜ்வீத் குறிமுறை குர்ஆனில் ஓத முடியாது சிரமம் என்று நாம் கண்மூடித்தனமாக இருந்தால் எதிர்கால எம் சமுதாயம் பரம்பரையாக நாம் பழக்கப்பட்டு வந்த தஜ்வீத் குறி முறையற்ற குர்ஆனைப் பெற்றுக் கொள்ள [illegible] நிலை ஏற்படும் என்பது நிச்சயம்.

அத்துடன் தஜ்வீத் குறியிடப்பட்ட குர்ஆனில் ஓதப் பழகாமல் இருந்தால் அக் குர்ஆனில் ஓத முடியாது பெரும் சிரமப்பட வேண்டியும் ஏற்படும்.

நாம் பழக்கப்பட்ட பரம்பரைக் குர்ஆனைப் பெற்றுக் கொள்ள முடியாத நிலை ஏற்படுவதுடன் தஜ்வீத் குறிமுறை குர்ஆனிலும் ஓத முடியாத நிலை ஏற்படும்.

அச்சந்தர்ப்பத்தில் எம் சமுதாயத்தில் பெரும் பிரச்சினை ஏற்படும்.

எனவே வெள்ளம் வரும் முன் அணைகட்டு என்ற பழமொழிக்கேற்ப நாம் இன்றே விழித்தெழுந்து தஜ்வீத் குர்ஆனில் ஓதப் பழகுவதுடன் எம் இளம் சமுதாயத்திற்கும் இந்த நல்வழி முறையைக் காட்ட முன்வருவோமாக!

அல்லாஹ் எல்லோருக்கும் நல்லருள் புரிவானாக!

இந்த அடிப்படையில் தஜ்வீத் குறிமுறைக் குர்ஆன் பிரதிகளையும் அவைகளில் உள்ள தஜ்வீத் குறிகளையும் முஸ்லிம் சமுதாயத்திற்கு அறிமுகப்படுத்தி தஜ்வீத் முறைப்படி திருக்குர்ஆனை ஓத புனித ரமழான் போட்டி ஒன்றை அகில இலங்கை ஜம்இய்யத்துல் குர்ஆன் இயக்கம் ஒழுங்கு செய்துள்ளது.

இதில் வயது அறிவு கட்டுப்பாடின்றி ஆண், பெண் சகலரும் பங்குபற்றலாம்.

இப் போட்டியில் ஒரு லட்சம் ரூபாவில் 100 பரிசுகளும் வழங்கப்படும்.

புனித மக்கா சென்று வர விமான டிக்கெட்டும் வழங்கப்படும்.

இப்போட்டியின் மூலமாகத் திருக்குர்ஆனை தஜ்வீத் முறைப்படி ஓதி அதனை விளங்கி அதன் அடிப்படையில் வாழ அல்லாஹ் அனைவருக்கும் அருள் புரிவானாக!

ஆமீன்! யாரப்பல் ஆலமீன்!

விஷயங்களில் தான்தோன்றித்தனமாகச் செயற்படுவோரைத் தடி எடுத்துத் திருத்த முயலும் அவசரப் போக்கு எதுவுமின்றி அண்ணல் நபி (ஸல்) அவர்கள் காட்டிய அன்பு வழியில் அணுகுமுறையோடு செயல்பட்ட நல்லறிஞர் ஷெய்கு அஹ்மத் அப்துல் காதிர் (ரஹ்) அவர்களின் முன்மாதிரி நமக்கு அரியதோர் படிப்பினையாகும்.

இச் சம்பவத்தோடு தொடர்புள்ள நல்லறிஞர் அவர்கள் சாமான்யமானவர் அல்லர்.

ஹஸரத் அபூபக்கர் சித்தீக் (ரலி) அவர்களின் 25 ஆவது தலைமுறையில் மதார் ஸதகதுல்லாஹில் காஹிரி (ரலி) அவர்களின் பரம்பரையில் அல்இமாமுல் அரூஸ் (ரலி) அவர்களின் பேரராக அஷ்ஷெய்கு ஜல்வத் சாஹுல் ஹமீத (ரலி) யின் புதல்வராகத் தோன்றிய அன்னார்தான் இலங்கையிலும் தென் இந்தியாவிலும் உலமா சபைகள் உருவாவதற்கு உறுதுணையாய் முன்னோடியாய் செயல்பட்டவர் என்பது பலருக்குத் தெரியாமல் இருக்கலாம்.

ஹாரீத் அரூஸ் (034)

# வணக்கமும் உணவும்

வயிறு நிறைய உண்பது! வணக்கத்தைப் பற்றிக் கடைவை உண்டாக்குகிறது.

உறக்கத்தை இழுத்துக் கொண்டு வரச் செய்யும்.

அதனால் புத்தியைக் கட்டுப் படுத்தும். உடலைக் கனமாக்கும்.

16 ஆண்டுகளாகத் தாம் வயிறு நிறைய சாப்பிட்டதே இல்லை என்று இமாம் ஷாபியீ (ரஹ்) அவர்கள் கூறியுள்ளார்கள்.

ஏ. முஹம்மது ஜலீல்

## இவ்வாண்டு கொழும்பில்

# உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டி

## 34 நாடுகள் பங்குபற்றும்

கொழும்பு ஏப் 19

18ஆவது உலக ஸ்னூக்கர் சாம்பியன் போட்டி இவ்வாண்டு நவம்பர் மாதம் கொழும்பில் நடைபெற விருக்கின்றது. இதில் 34 உலக நாடுகள் பங்குபற்றவிருக்கின்றன.

உலக சாம்பியன்களை எதிர்கொள்ள புதிதாக சாதனை வீரர் என்ற பட்டத்தை ஏற்றிருக்கும் பாடசாலை மாணவர் இந்திக கொடதுகொடவுடன் மற்றும் இருவர் தெரிவாகியிருக்கின்றனர்.

எம் எஸ் எம் நப்பார், எஸ் பொக்கேகு அகியோரே மற்றைய இரு வீரர்களுமாவர்.

அண்மையில் நடந்து முடிந்த இறுதித் தெரிவுகளின் பின்னர் இவர்கள் மூவரதும் பெயர்கள் அறிவிக்கப்பட்டன.

ஆஸ்திரேலியா, புருனை, வங்காளதேசம், பெல்ஜியம், கனடா, எகிப்து இங்கிலாந்து பிஜி கானா ஹொங்கொங் ஐஸ்லாந்து இந்தியா மாலைதீவு இஸ்ரவேல் ஜப்பான் கென்யா மலேசியா மோல்ட்டா மொரீசியஸ் நெதர்லாந்து நியூஸிலாந்து வட அயர்லாந்து நோர்வே பாகிஸ்தான், அயர்லாந்து குடியரசு ஸ்கொட்லாந்து சிங்கப்பூர் சூடான் சுவீடன் தாய்லாந்து அமெரிக்கா வேல்ஸ் மேற்கு ஜேர்மனி ஸிம்பாப்வே ஆகிய நாடுகள் தமது பங்களிப்பை உறுதிப்படுத்தி இருக்கின்றன.

போட்டிக்கான விண்ணப்ப முடிவு திகதி ஆகஸ்ட் 31ஆகும் [எ]




## "டொரத்தியர்" இல்லம் முதலிடம்

கல்முனை ஏப் 18

கல்முனை கார்மேல் பாத்திமாக் கல்லூரி ஆரம்பப் பிரிவு இல்ல விளையாட்டுப் போட்டியில் டொரத்தியர் இல்லம் அதிக புள்ளிகளைப் பெற்று சாம்பியனானது.

பிரஸ்தாப போட்டி நிகழ்ச்சிகள் கல்லூரி விளையாட்டு மைதானத்தில் அண்மையில் நடைபெற்றன.

இப்போட்டியில் டொரத்தியர் இல்லம் 92 புள்ளிகளையும், மேபிள் இல்லம் 72 புள்ளிகளையும் இமானுவேல் இல்லம் 68 புள்ளிகளையும் பெற்றுக் கொண்டன.

இங்கு மாணவர்களின் உடற்பயிற்சிக் கண்காட்சி விசேட நிகழ்ச்சியாக இடம் பெற்றிருந்தது.

(எ—281)

## நிவ்ஸ்டார் அணி சாம்பியனாகியது

வறக்காப்பொளை ஏப் 18

சப்ரகமுவ மாகாண கரபந்தாட்டச் சாம்பியன் தெரிவுப் போட்டியில் கேகாலை நிவ்ஸ்டார் அணி சாம்பியனாகியது.

இச்சாம்பியன் தெரிவின் நிமித்தம் குஹவத்தை நகர சபைத் திடலில் நடைபெற்ற சுற்றுப் போட்டியில் சப்ரகமுவ மாகாணத்தில் உள்ள பன்னிரெண்டு பிரபல கரபந்தாட்டக் கோஷ்டிகள் பங்குபற்றின.

இறுதிப் போட்டியான சாம்பியன் தெரிவுப் போட்டி கேகாலை மெகொடை நிவ்ஸ்டார் அணிக்கும் எஹலியகொடை புளூஸ்டார் அணிக்கும் இடையே இடம்பெற்றது; இதில் 03;00 என்ற வித்தியாசத்தில் நிவ்ஸ்டார் வென்றது.

குஹவத்தை விமலரத்ன இரத்தினக்கல் வியாபார நிறுவனத்தின் அனுசரணையில் நடைபெற்ற இச்சுற்றுப் போட்டியில் வெற்றி பெற்ற நிவ்ஸ்டாருக்கு வெற்றிக் கேடயமும் 3000 ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டன. இரண்டாம் இடத்தைப் பெற்ற அணிக்கு கேடயமும் 2000 ரூபா ரொக்கப் பரிசும் வழங்கப்பட்டன.

(எ—ரி—333)

## விளையாட்டு பரசூட் அமைத்து ஒத்திகை

ஹேவாஹெட்ட ஏப் 19

கண்டி, பெனிதெனிய தமிழ் வித்தியாலயத்தில் பெருந்தோட்டப் பாடசாலைப் பயிற்சி ஆசிரியர்கள் அண்மையில் ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு விளையாட்டுப் பரசூட் அமைக்கும் புதிய முறை ஒன்றின் ஒத்திகையொன்றை நடத்தினர்.

இந்நிகழ்ச்சிகளின் போது சுமார் முப்பது விளையாட்டுப் பரசூட்டுகள் பறக்க விடப்பட்டன.

ஆரம்ப வகுப்பு மாணவர்களுக்கு ஆரம்ப விஞ்ஞானப் பாடத்தில "வளி" எனும் பாடத்தை தெளிவாகப் பயிற்றுவிக்கவே இந்தப் பரசூட்கள் அமைக்கும் பயிற்சியை மேற்கொண்டனர்.

சுமார் 60 மாணவர்கள் குழுக்களாக ஈடுபட்டு இந்த விளையாட்டுப் பரசூட்களை அமைத்துள்ளனர். இதன்படி பயிற்சி ஆசிரியர் குழுவின் "பீ" பிரிவினரே இம்முயற்சியைத் திறம்பட மேற்கொண்டனர்

இந்தப் பயிற்சி நிலையத்தில் ஆரம்ப கணித பாடத்துக்குப் பொருத்தமான சில குழு முறை விளையாட்டுப் பொருட்களையும் அமைத்திருப்பது இங்கு குறிப்பிடத்தக்கது.

(எ—099)

## அன் — நூர் இளைஞர் கழக ஏற்பாட்டில் நோன்புப் பெருநாள் போட்டி

கொழும்பு ஏப் 19

எதிர்வரும் நோன்புப் பெருநாளை முன்னிட்டு அன்றைய தினம் சென்றல் கேம்ப் பாடசாலை மைதானத்தில் மாபெரும் விளையாட்டுப் போட்டி நிகழ்ச்சிகள் இடம் பெறும்.

சென்றல் கேம்ப் அன்—நூர் இளைஞர் கழகத்தினால் இதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.

இரண்டு வருட கால இடைவெளியின் பின் மீண்டும் கோலாகலமாக நடைபெறவிருக்கும் இந் நிகழ்ச்சிகளில் பல பாரம்பரிய நிகழ்ச்சிகளுடன் இன்னும் சில புதிய நிகழ்ச்சிகளும் நடத்தப்படவுள்ளன.

போட்டிகளுக்கான பிரவேசங்கள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளன. இதனால் இப் போட்டிகளில் பங்குபற்ற விரும்புவோர் விவரங்களுக்கு அன்—நூர் இளைஞர் கழக காரியாலயத்துடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகிறார்கள்.

[எ]

## சுடர் ஒளி கழக விளையாட்டுவிழா

வாழைச்சேனை ஏப் 18

தமிழ் சிங்கள புத்தாண்டை முன்னிட்டு எதிர்வரும் 26 27 28 ஆம் திகதிகளில் கொம்மாதுறை சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட ரீதியிலான மாபெரும் விளையாட்டு விழாவொன்றினை வெகு சிறப்பாக நடத்தவுள்ளது.

ஆண்களுக்கான 52 மைல் சைக்கிள் ஓட்டமும், ஆண்களுக்கான 26 மைல் சைக்கிள் ஓட்டம், பெண்களுக்கான 12 மைல் சைக்கிள் ஓட்டம் என்பன நடைபெறவுள்ளன.

ஆண்களுக்கான 52 மைல் சைக்கிளோட்டம் செங்கலடிச் சந்தியில் ஆரம்பித்து கலகுடா சென்று வாழைச்சேனை வழியாக வந்து மட்டக்களப்பைச் சென்று திரும்பி மீண்டும் செங்கலடியை வந்தடையும்.

போட்டி நிகழ்ச்சிகளின் இறுதி நாளான 28 ஆம் திகதி பாரம்பரிய விளையாட்டுக்களான கயிறு இழுத்தல், விநோத உடை சடுகுடு மற்றும் ஆண் பெண்களுக்கான வட்டக் காவடி நிகழ்ச்சிகளும் இடம்பெற உள்ளன.

அன்றைய தினம் விடுதலைப் புலிகள் மக்கள் முன்னணியின் மட்டக்களப்பு மாவட்ட இராணுவத் தளபதி திரு கருணா பிரதம அதிதியாகக் கலந்து கொள்வார்.

(எ)




### தலைவருக்கு "மெடல்" அணிவிப்பு

அகில இலங்கை வை எம் எம் ஏ பேரவையின் புதிய தலைவராக அல்ஹாஜ் எம் எப் எஸ் முஹீட் அண்மையில் நடைபெற்ற பேரவையின் 40 ஆவது வருடாந்த மாநாட்டின் போது தெரிவு செய்யப்பட்டார்.

முன்னாள் தலைவர் ஜனாப் ஹலீம் ஏ அசீஸ் (இடதுபுறம் காணப்படுபவர்) புதிய தலைவர் ஹாஜி முஹீட்டுக்குத் தலைவர் பதவிக்குரிய மெடலை அணிவிப்பதைப் படத்தில் காணலாம்.

[எ—007]




## புதுளைக் குழு வென்றது

## அமைய ஊழியர்

## பொலீஸ் நாய்கள்




20—4—1990

ஏப்ரல் 20 (வெள்ளிக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0530 | தஹ்ரேன் | யூ எல் 262 |
| 0540 | பஹ்ரேன் | ஜீ எப் 142 |
| 0635 | குவைத் | கே யூ 361 |
| 0650 | லண்டன், டுபாய் | யூ எல் 504 |
| 0745 | ஜித்தா, றியாத் | எஸ் வி 340 |
| 1225 | பாங்கொக் | ரி ஜி 307 |
| 2005 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2305 | மாலைதீவு | யூ எல் 102 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0015 | டுபாய், சோபியா | எல் இசட் 582 |
| 0120 | புக்கியோகா | யூ எல் 581 |
| 0200 | அபுதாபி, சிப்பல் பாரீஸ் | யூ எல் 563 |
| 0230 | டுபாய், சூரிச் பிராங்க் போர்ட் | யூ எல் 547 |
| 0700 | பஹ்ரேன் | ஜீ எப் 142 |
| 0750 | குவைத் | கே யூ 361 |
| 0915 | ஜித்தா, றியாத் | எஸ் வி 340 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 1325 | பாங்கொக் | ரி ஜி 307 |
| 1940 | மாலைதீவு | யூ எல் 101 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

ஏப்ரல் 21 (சனிக்கிழமை)

### வந்து சேரும் நேரம்

| | | |
|---|---|---|
| 0500 | புக்கியோகா | யூ எல் 582 |
| 0515 | மஸ்கட் | ஜீ எப் 3144 |
| 0655 | சிப்பல், பாரீஸ், அபுதாபி | யூ எல் 564 |
| 0720 | பிராங்க்போர்ட், சூரிச், டுபாய் | யூ எல் 548 |
| 0710 | சிப்பல், தஹ்ரேன், கராச்சி | கே எல் 801 |
| 0845 | டுபாய், மாலைதீவு | ஈ கே 802 |
| 1055 | திருச்சி | யூ எல் 132 |
| 1140 | சென்னை, பம்பாய் | ஐ சி 573 |
| 1345 | மாலைதீவு டுபாய் | ஈ கே 803 |
| 1355 | மாலைதீவு | யூ எல் 102 |
| 1550 | திருவனந்தபுரம் | யூ எல் 162 |
| 1755 | பம்பாய், சென்னை | ஐ சி 586 |
| 2230 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |
| 2315 | சென்னை | யூ எல் 122 |
| 2330 | சிங்கப்பூர் | யூ எல் 303 |
| 2355 | ஹொங்கொங், பாங்கொக் | யூ எல் 423 |

### புறப்படும் நேரம்

| | | |
|---|---|---|
| 0630 | மஸ்கட் | ஜீ எப் 3144 |
| 0805 | திருச்சி | யூ எல் 131 |
| 0845 | பாங்கொக் ஹொங்கொங் | யூ எல் 422 |
| 0930 | சிங்கப்பூர் | யூ எல் 302 |
| 0950 | டுபாய், மாலைதீவு | ஈ கே 802 |
| 1000 | மாலைதீவு | யூ எல் 101 |
| 1235 | சென்னை, பம்பாய் | ஐ சி 585 |
| 1300 | திருவனந்தபுரம் | யூ எல் 161 |
| 1450 | மாலைதீவு; டுபாய் | ஈ கே 803 |
| 1730 | பஹ்ரேன் | யூ எல் 201 |
| 1840 | பம்பாய், சென்னை | ஐ சி 574 |
| 1905 | கராச்சி, பஹ்ரேன் சிப்பல் | கே எல் 802 |
| 1945 | சென்னை | யூ எல் 121 |
| 2345 | சிங்கப்பூர் | எஸ் கியூ 402 |

குறிப்பு- யூ எல் — எயர் லங்கா, ஐ சி — இந்தியன் எயர் லைன்ஸ், ஈ கே — எமிரேட்ஸ் எஸ் யூ — ஏரோ புளொட், ஜீ எப் — கல்ப் எயர், யூ டி — யூ டி ஏ, டி எப் — கொண்டோர் எஸ் கியூ — சிங்கப்பூர் எயர் லைன்ஸ், பி கே — பாகிஸ்தான் இ கே யூ — குவைத் எயர்வேய்ஸ், இன்டர்நேஷனல் எயர் லைன்ஸ், ஸ்டேர்லிங் எயர் லைன்ஸ், எஸ் வீ — சவூதியா, இஸ் டி — டி ஜி — தாய் எயர் வேய்ஸ், பி பி — பால் எயர், எல் இஸட் — பிரத்தியேக சேவை, டி கே — பிரத்தியேக சேவை, எல் டி — பிரத்தியேக சேவை, கே எல் —றோயல் எயர் லைன்ஸ்,

விமான சேவைகள் மாற்றம் பற்றி அறிய தொடர்பு கொள்ள வேண்டிய தொலைபேசி இலக்கம் 452218 (விமான நிலையம்)

பதுளை ஏப் 18

மூன்றாம் பிரிவு கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றில் பதுளை கோஷ்டி, மாத்தளை சிங்க கோஷ்டியை 145 ஓட்டங்களால் தோற்கடித்தது-

மேற்படி போட்டி அண்மையில் பதுளை பொது விளையாட்டு மைதானத்தில் இடம் பெற்றது-

பதுளை கோஷ்டி 36 ஓவர்களில் எட்டு விக்கெட் நஷ்டத்திற்கு 183 ஓட்டங்களைப் பெற்றது-

சிங்க கோஷ்டி 14 ஓவர்களில் 35 ஓட்டங்களைப் பெற்ற சகல விக்கெட்டுகளையும் இழந்த இப் போட்டியில் தோல்வியுற்றது

[ரி-037]

## பொலீஸ் மக்கள் நல்லுறவு போட்டி

மடவளை, ஏப்- 18

பொலீஸ் பொது மக்கள் நல்லுறவை வளர்க்குமுகமாக றில்கலையில் விளையாட்டுப் போட்டியொன்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்தது-

அண்மையில் நடந்த மேற்படி விளையாட்டுப் போட்டியில் பாரம்பரிய விளையாட்டுக்கள் பலவும் இடம்பெற்றன-

இப் போட்டிகளில் பெருந் தோட்டப் பகுதியைச் சேர்ந்த அநேக தொழிலாளர்கள் பங்கு கொண்டனர்-

புன்வில உதவி அரச அதிபர் திரு பீ பீ ஹேரத் புன்விலை பொலீஸ் நிலையப் பொறுப்பதிகாரி பீ விக்ரமசிங்க ஆகியோர் விஷேட அதிதிகளாகக் கலந்து கொண்டனர்-

[ரி-431]

## திண்டாட்டம்

யாழ்ப்பாணம் ஏப் 18

அரசாங்கத்தினால் கடந்த வரவு செலவுத் திட்டத்தில் அறிவிக்கப்பட்ட 200 ரூபா சம்பள அதிகரிப்பு வடக்கு பிராந்திய போக்குவரத்துச் சபையின் தற்காலிக அமைய ஊழியர்களுக்கு இதுவரை வழங்கப்படவில்லை.

இப்படி தற்காலிக அமைய ஊழியர்கள் அதிருப்தி தெரிவிக்கின்றனர்.

புதுவருடத்திற்கு முற்பணமாக வழங்கப்படும் 1000 ரூபாவும் கூட வழங்கப்படவில்லை என்று அவர்கள் கவலை தெரிவித்திருக்கின்றனர். (ண-120)

## சாகசம்

பதுளை, ஏப்- 18

பதுளையில் பொலீஸ் நாய்களின் சாகசக் கண்காட்சியொன்று அண்மையில் பதுளை வின்சன்ட் டயஸ் விளையாட்டரங்கில் இடம் பெற்றது-

பொலீஸ் பாண்ட் வாத்தியம் மற்றும் கலாசார நிகழ்ச்சிகளும் இடம்பெற்றன பெருந்திரளான மக்கள் கண்டுகளித்தனர்- ஊவா மாகாண உதவி பொலீஸ் அத்தியட்சகர் திரு டெறி அமரசேகர இதனை ஒழுங்கு செய்திருந்தார்

[ரி-037]

# மாத்தறையில் ஆசிரியர் கிராமம்

மாத்தறை ஏப் 18

மாத்தறை மாவட்டத்தில் ஆசிரியர் கிராமமொன்றை அமைக்க தென்மாகாண சபையின் மாத்தறை மாவட்ட காணிக் குமிட்டி தீர்மானித்துள்ளது.

மாத்தறை மாவட்டத்தில் நிரந்தரமாக வசித்து வரும் காணி வீடு வசதியற்ற ஆசிரியர்களுக்கு அரசாங்கத்துக்குச் சொந்தமான காணிகளைப் பகிர்ந்து கொடுப்பதன் மூலம் இந்த ஆசிரியர் கிராமத்தை ஏற்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும்.

இதனை தென்மாகாண சபையின் மாத்தறை மாவட்ட காணிக் கமிட்டியின் தலைவர் திரு ஜி ஜி சுகுணதாஸ தெரிவித்தார்-

மாத்தறை அரசாங்க அதிபர் அலுவலகத்தில் நடைபெற்ற இக்கூட்டத்தில் அவர் மேலும் கூறியதாவது-

மாத்தறை மாவட்டத்தில் இதற்கான காணி ஒதுக்கப்படும். இதற்கு எம்பிக்களினதும் தென் மாகாண சபை உறுப்பினர்களினதும் ஒத்துழைப்பு அவசியமாகும்.

மாத்தறை மாவட்டத்தில் வீடு வசதியற்ற ஆசிரியர் குடும்பங்கள் இத்திட்டத்தினால் பெரும் நன்மையடைவர்.

மேலும் கல்வி ஊழியர்களின் கூட்டுறவுச் சங்கம் ஆசிரியர்களுக்கு வீட்டுக் கடன் வசதிகளைப் பெற்றுக் கொடுக்க விருப்பம் தெரிவித்துள்ளது.

(இ-430)

## ரூபவாஹினி

| | |
|---|---|
| 8-53 | நிகழ்ச்சி நிரல் |
| 9-00 | கிரும மினும |
| 9-15 | சில்ப சாரிக்கா |
| 9-40 | கும்பெரலிய - உரையாடல் |
| 10-05 | முகாமைத்துவ நிகழ்ச்சி |
| 10-20 | முத்துஹர பனமுத்து |
| 10-45 | எண்கணிதம் (உ,த) சிங்களம் |
| 11-10 | நொன் ஃபோமல் கல்வி நிகழ்ச்சி |
| 11-35 | ஒளிபரப்பு முடிவு |
| 4-30 | அத்வல |
| 5-00 | செய்திகள் - சிங்களம் |
| 5-15 | விளையாட்டும் தேகாரோக்கியமும் |
| 5-30 | ரிக்கிரி |
| 6-00 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| 6-10 | பிரேக்கிங் ஒஃப் த ரமழான் ஃபாஸ்ற் |
| 6-30 | செய்திகள் - தமிழ் |
| 7-00 | சந்திப்பு தமிழ் |
| 7-30 | ரிதி ரேக்கா |
| 8-00 | செய்திகள் - சிங்களம் |
| 8-30 | வெஸ்சன் |
| 9-05 | லொட்டோ சீட்டிழுப்பு |
| 9-30 | செய்திகள் - ஆங்கிலம் |
| 10-05 | யேசுநாதர் தமிழ்ப்படம் |
| 11-50 | ஒளிபரப்பு முடிவு |

## ஐ டி என்

| | |
|---|---|
| 6-00 | மும்மணிகளுக்கு அஞ்சலி |
| 6-15 | தொகிளிஷெல் பே |
| 6-30 | செய்திகள் - சிங்களம் |
| 7-00 | கீதாஞ்சலி |
| 7-30 | மியூசிக்கல் ஷோகேஸ் |
| 8-00 | வொண்டர் ஸ்ட்ரக் |
| 8-30 | பீச் கோம்பர்ஸ் |
| 9-00 | அபான்ஸ் சங்கீத சந்தல்ல |
| 9-30 | கலக்ஸி நைட் |
| 10-00 | செய்திகள் - ஆங்கிலம் |
| 10-26 | போச்சூன்ஸ் ஆப்வோர் |
| 11-26 | ஒளிபரப்பு முடிவு |

தினபதி

வார இதழ் "சிந்தாமணி" ஞாயிறுதோறும் வெளிவரும்

# ஆசிரியர்கள் உயர் கல்வி பெற சம்பளத்துடன் விடுமுறை

கொழும்பு, ஏப்- 19

ஆசிரியர்கள் தாம் விரும்பும் எந்தத் துறையிலாவது உயர் கல்வி பெறுவதற்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படும்.

கல்வி மற்றும் உயர் கல்வி அமைச்சர் திரு லலித் அத்துலத் முதலி இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகிறார்.

ஆங்கில பாடத்தில் பட்டப் படிப்பை அல்லது டிப்ளோமா படிப்பை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு மட்டுமே தற்சமயம் சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்படுகிறது.

ஏனைய துறைகளில் மேற்படிப்பைத் தொடரும் ஆசிரியர்களுக்கு சம்பளமற்ற விடுமுறையே வழங்கப்படுகிறது.

தற்காலிகமாக வெளிநாடுகளில் வேலை வாய்ப்பைப் பெற்றுச் செல்லும் ஆசிரியர்களுக்கும் சம்பளமற்ற விடுமுறை வழங்கப்படுகிறது.

உயர் கல்வியை மேற்கொள்ளும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டுமென்று தேசிய கல்வி ஊழியர் சங்கம் அமைச்சர் அத்துலத் முதலியைக் கேட்டுள்ளது.

இச்சங்கம் அண்மையில் அமைச்சர் அத்துலத் முதலியைச் சந்தித்து ஆசிரியர்களின் விடுமுறை விடயமாக நீண்ட நேரம் பேச்சுவார்த்தை நடத்தியது.

தற்சமயம் பயிற்சி ஆசிரியர்களாக நியமிக்கப்பட்டுள்ளோரில் அநேகர் பட்டப் படிப்பை மேற்கொள்ளாதவர்கள். ஆகையால் அவர்களுக்குத் தமது பட்டப் படிப்பைத் தொடர வசதி அளிக்கப்பட வேண்டும் என்றும் இச்சங்கம் அமைச்சரிடம் சுட்டிக்காட்டியது.

இதன்படி மேற்படிப்பைத் தொடரும் ஆசிரியர்களுக்கு சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட வேண்டும் என்பதை அமைச்சர் ஒப்புக் கொண்டார்.

இத்திட்டத்தை செயற்படுத்த தாம் நடவடிக்கை எடுப்பதாக அமைச்சர் இச்சங்கத்திடம் உறுதியளித்தார். [ந—வ]

காலரா, மூளைக் காய்ச்சல்

# தடுப்பூசிகளை ஹஜ் யாத்திரிகர்கள் ஏற்றிக் கொள்ள வேண்டும்!

கொழும்பு, ஏப்- 19

ஹஜ் யாத்திரிகர்கள் சவூதி அரேபியா செல்வதற்கு 10 தினங்களுக்கு முன்னர் காலரா மூளைக் காய்ச்சல் தடுப்பூசி மருந்தை ஏற்றிக் கொள்ள வேண்டும்.

இந்தச் சுகாதார உத்தரவை இவ்வாண்டும் கடுமையாக அமுல்படுத்த சவூதி அரேபிய அரசு முடிவு செய்துள்ளது.

ஹஜ் யாத்திரிகர்கள் இந்த தடுப்பூசி மருந்துகளை ஏற்றிக் கொள்ள வேண்டுமென்று முஸ்லிம் சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம அஸ்வர் கூறியிருக்கிறார்.

இம்மருந்தை ஏற்றியதற்கான சான்றுப் பத்திரத்தை ஹாஜிமார் வைத்திருக்க வேண்டும்.

போலியான சான்றுப் பத்திரங்களைச் சமர்ப்பிக்கும் யாத்திரிகர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படுமென்று அந்நாட்டு அரசு அறிவித்திருப்பதாக அமைச்சர் அஸ்வர் மேலும் கூறியுள்ளார். [ந—007]

மத்திய கிழக்கில் உடனடி வேலைவாய்ப்புக்கள்

பிரபல அமெரிக்கன் கல்ப் ஏஷியன் கேட்டரிங் கம்பனியில் பின்வரும் வெற்றிடங்களுக்கு உடனடி ஆட்கள் தேவைப்படுகின்றனர்.

1 கேட்டரிங் மேனேஜர்

2 உதவி கிச்சன் மேனேஜர்

வடமேல் மாகாணத்தில்

# உல்லாசப்பயண துறை அபிவிருத்திக்கு திட்டம்

கொழும்பு, ஏப் 19

வடமேல் மாகாணத்தில் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்த பாரிய திட்டமொன்று மேற்கொள்ளப்படவிருக்கிறது.

தனியார் துறையினரின் உதவியுடன் மேற்படி திட்டம் அமுல்படுத்தப்படுமென்று மாகாண முதலமைச்சர் காமினி ஜெயவிக்கிரம பெரேரா நேற்று முன்தினம் தெரிவித்தார்.

உத்தேச திட்டம் குறித்த ஒரு மாத காலத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்குமபடி உல்லாசப் பயணத் துறை தலைவர் பீரமா பெர்னாண்டோ தலைமையிலான 6 பேரைக் கொண்ட கமிட்டி கேட்கப்பட்டிருப்பதாக திரு பெரேரா தெரிவித்தார்.

இந்த உத்தேச திட்டத்தின் கீழ் குருணாகல் பகுதியில் பன்னல - குருநாகல் வீதியில் உள்ள 2,500 க்கும் அதிகமான ஏக்கர் நிலப்பரப்பு வன பாதுகாப்பு பகுதியாக பிரகடனப்படுத்தப்படும். உல்லாசப் பயணிகளை கவரும் விதத்தில் இந்தப் பகுதி வனவிலங்கு பூங்காவாக பயன்படுத்தப்படும்.

இவ்வாறு வட மத்திய மாகாண முதலமைச்சர் கூறினார்.

கல்பிட்டி பகுதியில் ஒதுக்குப் புறமாக உள்ள பல தீவுகள் இந்த திட்டத்தின் கீழ் மாலைதீவில் உள்ளது போன்ற உல்லாசப் பயணிகளை கவரும் இடங்களாக மாற்றியமைக்கப்படும்.

முதலமைச்சர் மேலும் கூறியதாவது.

வில்பத்து வனவிலங்கு சரணாலயத்திற்கு வனாத்த வில்லு பகுதியிலிருந்து வரும் விதத்தில் ஒரு புதிய பாதையை திறக்க மாகாண சபை எதிர்பார்க்கிறது.

இதன் காரணமாக வடமேல் மாகாணத்திற்கு பெருந் தொகையான உல்லாசப் பிரயாணிகளை கவர முடியும். மாகாணத்திற்கு கிடைக்கும் வருமானமும் அதிகரிக்கும்.

பழைய ராஜதானிகளான யாப்பஹுவா, தம்பதெனியா, பண்டுவஸ்நுவர குருநாகல் உட்பட சகல புதைபொருள் ஆராய்ச்சி நகரங்களும் இந்த புதிய திட்டத்தின் கீழ் அபிவிருத்தி செய்யப்படும்.

வரும் மூன்று மாத காலத்தில் இது அமுல்படுத்தப்படும்.

வடமேல் மாகாணத்தில் உல்லாசப் பயணத் துறையை மேம்படுத்தும் நோக்கமாக உல்லாசப் பயண ஹோட்டல்கள் தங்கு விடுதிகள் போன்றவற்றை கட்டியெழுப்புவதில் தனியார் துறையினரின் ஆதரவு நாடப்படும்.

புதைபொருள் ஆராய்ச்சி நகரங்களை அபிவிருத்தி செய்வதன் மூலம் சுற்றாடல் பாதுகாப்பு மற்றும் உள்ளூர் வாசிகளை இதில் பங்கு பற்றச் செய்யும் என்று முதலமைச்சர் சொன்னார். (ந—க)

வெளிநாட்டு

# தபால் உடைப்பு மோசடியில் இருவர் கைது

கொழும்பு, ஏப்- 19

இலங்கைக்கு வரும் விமானத் தபால்களை உடைத்து அவற்றிலுள்ள வெளிநாட்டு பண நோட்டு, காசோலை, வங்கி ஓடர் பத்திரம் போன்றவற்றைத் திருடியதாக்க கூறப்படும் இரு நபர்கள் ரகசியப் பொலீஸாரால் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த மோசடி நடவடிக்கை சில காலமாக மேற்கொள்ளப்பட்டு வந்துள்ளதாகக் கூறப்படுகிறது.

திருடப்பட்ட 35,000 ரூபா பணத்தைக் கொண்டு ஆட்டோ ஒன்றை வாங்க ஒருவருக்கு முற்பணமும் கொடுக்கப்பட்டதாக விசாரணைகள் மூலம் தெரிய வந்துள்ளது.

கொழும்பு டாம் வீதியிலேயே இந்த திருட்டு கோஷ்டி இயங்கி வந்ததாக கூறப்படுகிறது.

இரகசியத் தகவலை அடுத்து அங்கு சென்ற பொலீஸார் விசாரணைகளை ஆரம்பித்தனர்.

அப்போது 800 வெளிநாட்டுத் தபால்கள் வரை ஒவ்வொன்றாக உடைக்கப்பட்டுக் கொண்டிருந்ததைக் கண்டு பிடிக்கப்பட்டது.

இந்த மோசடி தொடர்பாக இரு முஸ்லிம்கள் கைது செய்யப்பட்டனர்.

ஜெசன்ஜர் வீதி இல்யாஸ் மீத் வீதி, பண்டாரநாயக்கா மாவத்தை, பழைய சோனகர் தெரு, டெம்மண்ட் வீதி, டாம் வீதி ஆகிய இடங்களில் வசிப்பவர்களுக்கு வெளிநாடுகளில் இருந்து அவர்களின் உறவினர்களினால் அனுப்பப்பட்ட கடிதங்களே இவை.

பல வெளிநாட்டு முத்திரைகளும் இங்கிருந்து கண்டுபிடிக்கப்பட்டனவாம்.

கைதான ஒரு சந்தேக நபர் கொழும்பு மத்திய தபால் பரிமாற்ற நிலையத்தில் வேலை செய்பவர்.

இவர் கடிதங்களை தபால் பகுதியில் அனுப்பவர்.

இவர் 12 வருட காலம் தபால் நிலையத்தில் வேலை செய்பவர் என்றும் தெரிய வந்துள்ளது.

உடைக்கப்படாத 560 கடிதங்கள் பொலீஸார் தபால் அதிகாரிகளிடம் திருப்பி ஒப்படைத்தனர்.

டாம் வீதியில் வசிப்பவர்களுக்கு வெளிநாட்டுத் தபால்கள் கிடைக்க வேண்டிய இருந்தும் கிடைக்காமல் போயிருந்ததால் அவர்கள் அளித்த புகார்களை அடுத்தே பொலீஸார் தேடினர். (ந—007)

# இடைக்கால நிர்வாகம் எதனையும் புலிகள் ஏற்கா

— அன்டன் பாலசிங்கம்

யாழ்ப்பாணம், ஏப்- 19

எந்தவொரு இடைக்கால நிர்வாகத்தையும் விடுதலைப் புலிகள்

இது சம்பந்தமாக விடுதலைப் புலிகளிடம் கேட்கப்பட்டபோதே திரு பாலசிங்கம் மேற்



பலவித உடைகளின் வரிசை....
கவர்ந்திடும் வருபவர் மனதை!

நங்கையர்க்கும், ஆடவர்க்கும்
சிறுவர் சிறுமியர்க்கும்
பாவனைக்குத் தயாராக
பலவித ஆடைகள்!

Hameedia's
Always in fashion

ஹமீதியாஸ்
58, காலி வீதி, வெள்ளவத்தை
கொழும்பு-6 ☎: 585609

ஹஜ் யாத்திரை—1990

1 கேட்டரிங் மேனேஜர்
2 உதவி கிச்சன் மேனேஜர்
3 கேட்டரிங் சூப்பவைசர்
4 பிரதம சமையலாளர்
5 பேக்கர்கள்
6 கிளீனிங் சூப்பவைசர்
7 வெயிட்டர்ஸ்
8 ஜெனிட்டர்/ லேபரர்ஸ்

1 சமபளம் தகைமைக்கேற்ப தீர்மானிக்கப் படும-
2 உணவு தங்குமிட வைத்திய வசதிகள் வழங்கப் படும
3 எதிர்வரும 21 ம திகதி எமது வெளிநாட்டு பிரதிநிதிகளால் நேர்முக பரீட்சை நடத்தப் படும-
4 ஆங்கில அறிவு அனுபவ தகைமையும உடையவர்கள் உரிய ஆவணங்களுடன் பாஸ்போர்ட் சகிதம நேரில் வரவும-

Direct Lines

2 ம மாடி.
225, டாம வீதி.
கொழும்பு—12-

தொழில் லைசன்ஸ் இல- 524
அங்கீகார இல-

ஏ எல்/524/03/90
ஏ எல்/524/05/90

எந்தவொரு இடைக்கால நிர்வாகத்தையும் விடுதலைப் புலிகள் இயக்கம ஏற்காது-

தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும் இவ்வாறு தெரிவித்துள்ளார்-

புளொட் இயக்கம அனைத்து இயக்கங்களையும் பிரதிநிதித்துவப்படுத்தும வகையில் இடைக்கால அரசாங்கம ஒன்றை ஏற்படுத்த வேண்டும எனக் கோரிக்கை விடுத்திருந்தது தெரிந்ததே!

இது ... புலிகளிடம் கேட்கப்பட்ட போதே திரு பாலசிங்கம மேற்கண்டவாறு சொன்னார்-

மக்களால் தெரிவு செய்யப்பட்ட பிரதிநிதிகளைக் கொண்டு மாகாண சபை நிர்வாகத்தை நடத்த விரும்புகிறோம-

மக்களால் நிராகரிக்கப்பட்ட குழுக்களைக் கொண்டு அமைக்கப்படும் எந்தவொரு நிர்வாக அமைப்பிலும புலிகள் பங்குபற்ற மாட்டார்கள் என்றும அவர் மேலும் கூறினார்-

[ந—கு]

# மனித உரிமைகள்

## மீதான கட்டுப்பாடுகள்

## பற்றி சர்வகட்சி பிரதிநிதிகள் குழு

கொழும்பு, ஏப்- 19

சர்வ கட்சி மாநாட்டின் பிரதிநிதிகள் குழு நேற்று முன்தினம ஜனாதிபதி செயலகத்தில் கூடிய போது மனித உரிமைகள் மீதான கட்டுப்பாடுகள் பற்றி ஆராயப்பட்டது-

ஜனாதிபதி திரு ஆர் பிரேமதாசவின் தலைமையில் கூடிய கூட்டம இரண்டு மணித்தியாலங்கள் நடைபெற்றது-

மனித உரிமைகள் மீதான கட்டுப்பாடுகளில் கொண்டு வரப்பட வேண்டிய திருத்தங்களைப் பற்றியும குழு ஆராய்ந்தது-

இந்த விடயம் மேலும் ஆராயப்படவிருப்பதாக ஜனாதிபதி செயலகத்தினால் விடுக்கப்பட்ட அறிக்கை ஒன்றில் குறிப்பிடப்பட்டுள்ளது-

நீதி அமைச்சர் ஜனாப் ஏ சி எஸ் ஹமீது போக்குவரத்து அமைச்சர் திரு விஜேபால மெண்டிஸ், கலாசார அமைச்சர் திரு டபிள்யூ ஜே எம் லொக்கு பண்டார ஆகியோர் அரசின் சார்பில் கூட்டத்தில் கலந்து கொண்டனர்-

சர்வகட்சி மாநாட்டின் செயலாளர் திரு பிரட்மன் வீரக்கோன் உட்பட பல சிரேஷ்ட அதிகாரிகளும் கூட்டத்தில் கலந்து கொண்டனர்-

15 அரசியல் கட்சிகளின் பிரதிநிதிகளும சமுகமளித்து இருந்தனர்- (ந—ற)

## இந்து சமய

## பேருரை நாளை

கொழும்பு, ஏப்- 19

இந்து சமய, இந்து கலாசார திணைக்களம மாதம இரு முறை நடத்தும இந்து மதப் பேருரை நாளை சனிக்கிழமை மாலை 4-30 மணிக்கு, இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபன 14ஆவது மாடி கேட்போர் கூடத்தில் நடைபெறும.

இது இந்த மதப் பேருரையின் 13ஆவது தொடராகும.

"பண்பாட்டுப் படிமுறையில் பெண்களின் கற்பு நலன்" என்ற தலைப்பில் வித்துவான் திருமதி வசந்தா வைத்தியநாதன் சொற்பொழிவாற்றுவார். (ந—கு)

... பொலிஸார் கேட்டுள்ளனர்- (ந—007)

## ராஜாங்க அமைச்சர்களுக்கு வரவேற்பு

கொழும்பு, ஏப்- 19

துறைமுக கப்பற்றுறை ராஜாங்க அமைச்சர் ஜனாப் எம ஈ எச் மஹ்ரூப் போக்குவரத்து ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் யூ எல் எம் பாருக் முஸ்லிம சமய கலாசார ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் ஏ எச் எம் அஸ்வர் ஆகியோருக்கு அகில இலங்கை முஸ்லிம லீக் வாலிபமுன்னணி சம்மேளனம இன்று 20 ஆம திகதி வரவேற்பு அளிக்கும-

லீக்கின் தலைமையகத்தில் மாலை 5-15 மணிக்கு இந்த வைபவம ஆரம்பமாகும்-

வீடமைப்பு ராஜாங்க அமைச்சர் அல்ஹாஜ் இம்தியாஸ் பாக்கீர் மாக்கார் வரவேற்புரை நிகழ்த்துவார்-

ஜனாப் ரிஸ்வி சின்ன லெவ்வை தலைமை வகிப்பார்-

செயலாளர் அல்ஹாஜ் என் எம் அமீன் நன்றியுரை நிகழ்த்துவார்- [ந—007]

# யாத்திரை—1990

இன்ஷா அல்லாஹ்! இவ்வருடம எமது நிறுவனம ஹஜ் வேலைகளை மேற்கொள்ள உள்ளது. சிறந்த குளிரூட்டப்பட்ட தங்கும வசதிகளுடனும போக்குவரத்து வசதிகளுடனும ஹரமிற்கு மிக அருகாமையில் பாலைவன குளிரூட்டிகள் மினா/அரபாவில் வசதிகள் செய்து தரப்படும-

பல வருட அனுபவமுள்ள மௌலவிகளுடன் ஜூன் மாத 3 ஆம வாரத்தில் பயணத்திற்கான ஏற்பாடுகள் செய்யப்படும-

உடன் தொடர்பு கொள்ளவும-

மௌலவி
**எஸ். எச். ஆதம்பாவா (மதனி)**
ஈஸ்டர்ன் அரபிக் கல்லூரி,
அட்டாளைச்சேனை (தொலைபேசி 067/2515)

**மௌலவி எம். புர்ஹான் (பாரி)**
(தொலைபேசி 045/4276) (மடவளை/கஹறவத்த)

மௌலவி
**எம். ஜே. எம். அஜ்வாட் (பாரி)**
அல் அரபிக் கல்லூரி
அக்குறணை

**ஹாஜி ஏ. எம். எம். பஸாஹிர்**
பண்டாரவளை
(தொலைபேசி 057/2548, 057/2424)

**M. M. SHA NAWAZ**
**B. N. F. TRAVELS & TOURS**
F 58, People's Park
Colombo — 11
Telephone: 433422 435906 Res: 723426

இப்பத்திரிகையை அச்சிட்டு வெளியிட்டது இன்டிபென்டன்ட் நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட் 5 குணசேன மாவத்தை கொழும்பு 12 இலங்கை தபால் பெட்டி இல 1613. வெளியிட்ட திகதி 20 ஏப்ரல் 1990

DINAPATHI 5, Gunasena Mawatha, Colombo — 12
P. O Box 1613